1325

Reg No. M 2147

# THE "AGRICULTURIST"

*A monthly Journal devoted to Agriculture and its allied subjects.*

# "கிருஷிகன்"

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
22 AUG 1928
MADRAS
SAID

| Vol. XI<br>புத்தகம் XI | விபவஹு ஆவணிமீ 1உ<br>1928-ம்ஹு ஆகஸ்டுமீ 16உ | No- 5<br>பிரதி.5 |
|---|---|---|

CONTENTS

| | |
|---|---|
| Telinga Potato yam | 97 |
| Sewage Water & its uses | 102 |
| Exhibition Motor of the Agricultural Department | 108 |
| News & Notes | 110 |
| Cancer in cattle | 111 |
| Cocanut Errata | 113 |
| Correspondence | 118 |
| Almanack | 122 |

பொருளடக்கம்

| | |
|---|---|
| கருணைக்கிழங்கு | 97 |
| சாக்கடைத் தண்ணீரும் அதன் உபயோகங்களும் | 102 |
| சென்னை விவசாய டிபார்ட்மெண்ட்டார் திட்டம் செய்திருக்கும் கண்காக்ஷி மோட்டார் | 108 |
| குறிப்புகள் | 110 |
| கால்கடைகளில் புற்று நோய் | 111 |
| தென்னை பிழைதிருத்தம் | 113 |
| கடிதம் | 118 |
| பஞ்சாங்கம் | 122 |

**Editor Rao Bahadur J Chelvaranga Raju**
"Jagannadha Baugh" Saidapet

Annual Subscription Including Postage Re ONe only

Copy Right] [Registered

## கவனியுங்கள்

விவசாயத்தில் இப்போது அடையும் இலாபத்தைவிட அதிக இலாபம் பெற விரும்புகிறீர்களா?

அப்படியானால் இந்தியாவிலேயே இந்தியர்களாலேயே செய்யப்பட்ட இந்திரிய வஸ்த்துகளடங்கிய இயற்கை உரங்களை வாங்கி உபயோகியுங்கள்.

நாங்கள் எலும்புத்தூள், ஜவ்வு, கொம்பு சீவல், புண்ணாக்குகள் முதலிய சகலமான எருக்களையும் அந்தந்த பயிர்களுக்குத் தக்க எருக்களைக் கலந்தும் தயாரித்தும் விற்கிறோம்.

இயற்கை உரங்களைச் சேர்க்காமல் தற்காலம் அதிக அட்டகாசப்படுத்தி விற்கும் செயற்கைஉரங்களாகிய உப்பு உரங்களைத் தனியாய் உபயோகித்தால் கெடுதல் சம்பவிப்பதைப் போலல்லாமல் எங்கள் இயற்கை உரங்களால் எப்போதும் நன்மையே உண்டாவதோடு நிலவளமும், நாளுக்கு நாள், வாரத்திற்கு வாரம், மாசத்திற்கு மாசம் வருஷத்திற்கு வருஷம் அபிவிருத்தியடையும்என்பதில் சந்தேகமேயில்லை,

விலை முதலிய விபரங்களறிய விரும்புவோர்:—

ஏ. ஜெ. ரோட்ரிக்ஸ் அண்ட் கோ,

ஏஜண்ட்ஸ் கடம்பூர் எருக்கிடங்கு

கடம்பூர் (S. I. R-)

என்று எழுதி முழு விவரங்களறியலாம்.

# ஜெயரங்கன்

## J. R. ரங்கராஜா

அவர்களால் எழுதப்படும் புது நாவல் அச்சிலிருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் வெளிவரும்.

## கம்மபாலன்.

### தமிழ் மாதப் பதிப்பு

தென்னாட்டில் கம்ம ஜாதியப் பத்திரிக்கை இஃதொன்றே. கிராமவாசிகளுக்கவசியமான பொது விஷயங்கள் வெளிவரும். விளம்பரங்களுக்குத் தக்க சௌகரியமுண்டு. வருட சந்தா ரூ. 1 தான்.

ஐக்கிய சங்கங்களுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் வேண்டிய புத்தக பாரங்கள் எம்மிடம்கிடைக்கும்.

R. வெங்கடசாமி நாயுடு.

பத்திராதிபர். கம்மபாலன்

திருத்தாங்கல்

# THE "AGRICULTURIST"

*A monthly Journal devoted to Agriculture and its allied subjects.*

# "கிருஷிகன்"

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை.

| Vol. XI<br>புத்தகம். XI | விபவஹு ஆவணி மீ 1வ<br>1928-ம்ஹு ஆகஸ்டுமீ 16வ | No. 5<br>பிரதி. 5 |
|---|---|---|


## TELINGA POTATOYAM

### கருணைக் கிழங்கு

இப்பயிரானது நமது இராஜதானியில் பலபாகங்களிலும் பயிரிடப்பட்டு கறிவுபயோகார்த்தமாக உபயோகப்படுத்தப்படுகிறது. இது வெவ்வேறு இடங்களில் ஆங்காங்குள்ள பழக்க வழக்கங்களுக்கேற்றவாறு பயிரிடப்படுகிறதெனினும் பொதுவாகக் கவனித்துப் பயிரிட வேண்டிய விதங்களை இங்கு எடுத்துரைப்போம்.

### இதற்கேற்ற நிலம்

சரியான வடிகால் வசதியுள்ள நஞ்செய் நிலங்களிலும், குருமண், இருமண்கலந்த தோட்டக்கால் நிலங்களிலும் பயிரிடலாம். நிலத்தின் தன்மைக்கேற்றவாறு வாரம் ஒருமுறையோ இருமுறையோ தண்ணீர் இறைக்க வேண்டியதிருப்பதால் மானாவாரிப் புஞ்செய் நிலங்களில் பயிரிட முடியாது.

### நிலம் தயாரிப்பது

வடிகால் வசதியுள்ள நஞ்செய் நிலங்களில் தை, மாசி மாதங்களில் நெல் அறுவடையான உடன் பதத்தில் 2 சால் இரும்புக்கலப்பையால் அல்லது நாட்டுக்கலப்பையால் அலற உழுது சணப்பு அல்லது சடம்பு பசுந்தாள் உரத்திற்காக அடர்த்தியாய் விதைத்து மரம் அடித்து விடவேண்டும். விதைத்த 2மாதங்களில் நன்றாய் வளர்ந்து விடும். அதை வேருடன் அறுத்து துண்டுதுண்டாய் வெட்டி அந்நிலத்திலேயே சிதறி இரும்புக்கலப்பை கொண்டு உழுதால் அத்தாள் மண்ணில் மறைந்து விடும். எக்கருக்கு 25 வண்டி குளத்து வண்டல்

லும் 25 வண்டி தொழுஎருவும் சிதறி மறுபடியும் பசுந்தாள் மடி
த்து உழுத ஒரு பாதத்திற்குப் பின் 3 அல்லது 4 உழவு அலற உழுது
விடவேண்டும். அக்காலத்தில் பதத்திற்கு மழை பெய்யாவிட்டால்
குளம் கிணர்களிலிருந்து தண்ணீர் இறைத்துப் பதம் கட்டி உழவே
ண்டும். இப்படி சரிவர உழுத பின் இரும்புக் கலப்பை யிருக்கப்
பட்டவர்கள் ஒரு சால் நேராக ஓட்டி நெத்திமஞ்சி சென்றதும்
மடக்கி அப்படைசாலிலேயே திருப்பி ஓட்டினால், மண்வெட்டி வே
லையும் ஆள் பிடிமானமும் அதிகம் செல்லாமல் மஞ்சுகள் போட்டு
விடக் கூடும். இரும்புக் கலப்பை இல்லாவிட்டால் ஏக்கர் 1 க்கு
மஞ்சுகளும் கால்களும் போட்டு கால் இழுக்க சுமார் 15 ஆட்கள்
வரை பிடிக்கும். ஒரு மஞ்சுக்கும் அடுத்தமஞ்சுக்கும் குறைந்தது ஒரு
அடி தூரமாவது இருக்கும்படி மஞ்சுகள் போடவேண்டும்.

## கிழங்குகள் நடுவது

கூடைகளில் கிழங்குகளை வைத்து 9 அங்குலத்திற்குக் குறை
யாமலும் ஒரு அடிக்கு அதிகப்படாமலும் ஒவ்வோர் கிழங்காகக்
கால்களில் போட்டுக் கொண்டு போவார்கள். கூடவே மண்வெட்டி
யால் இரு பக்கங்களிலுமுள்ள மண்ணை கிழங்குகளுக்கு மேல் 3 அங்
குலம் படியும்படி தள்ளிக் கொண்டு போவார்கள். இவ்வாறு கிழ
ங்குகள் நட்டு முடிந்த உடன் முதல் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.
சில இடங்களில் நட்ட உடனேயும், வேறு சில இடங்களில் மூன்றும்
நாளும் கூட அவரவர்கள் சௌகரியா சௌகரியங்களுக் கேற்றவாறு
தண்ணீர் விடுவது வழக்கம். 2 நாள் தாமதித்துத் தண்ணீர் பாய்ச்சு
வதால் முளைப்பது தாமதமாய் முளைக்குமே தவிர வேறு எவ்வித கெ
டுதலும் இதனால் ஏற்பட்டு விடாது.

## கலப்புப் பயிர்

கிழங்குகளுடன் சிலஇடங்களில் மஞ்சளும், சிலஇடங்களில் முளை
க்கீரை, தண்டு முதலியனவும், வேறு சில இடங்களில் சில தினுசு
காய்கறிச் செடிகளும் கூடவே போடுகிறார்கள். இவ்வாறு கூட்டுப்
பயிர் போடுவதால் நிலத்திலுள்ள எருச்சத்தை அந்த ஊடுப்பயிர்
கள் சாப்பிட்டு முக்கியமாகிய முதல் பயிரைக் கெடுத்து விடுவதோடு
அதற்குச் செய்ய வேண்டிய பின்செய்நேர்த்திகளாகிய களைவெ
ட்டல், மண் அணைத்தல் முதலியன காலாகாலத்தில் செய்வதற் கில்
லாமல் இடையூறு விளைவிக்கும். ஆகையால் ஊடுப்பயிர் போடாமல்
தனிப்பயிராய்ச் செய்யவேண்டும்.

## பின்செய் நேர்த்தி

தண்ணீர் பாய்ச்சிய 18-20வது நாட்களில் முளைக்க ஆரம்பித்து சுமார் ஒரு மாதத்தில் அநேகமாய் முளைத்து விடும். முளைத்த உடனே கைக்களைக்கொட்டால் நன்றாய்க் களையெடுத்து புல் பூண்டுகளில்லாமல் களை யெடுத்து பயிர் சற்று வதங்கும் வரை தண்ணீர் விடாமல் வைத்திருந்து பயிர் வாட்டங் கொடுத்த உடன் தண்ணீர் இறைக்க வேண்டும். அதற்கப்பால் ஒருமாதம் பொருத்து 2 வது களை வெட்டி அரை பாரம் முத்துக் கொட்டைப் பிண்ணாக்கைத்தூள் செய்து ஒவ்வொரு மூட்டைச் சுற்றிலும் கொஞ்சம் கொஞ்சம் புண்ணாக்கு எரு போட்டு இருபக்கங்களில் முகடுகளிலிருக்கும் மண்ணை எடுத்து அணைக்க வேண்டும். அப்பால் ஒரு மாதம் பொறுத்து மூன்றாவது களை வெட்டி முன் போலவே திரும்பவும் அரை பாரம் முத்துக்கொட்டைப் புண்ணாக்கு உரம் மூடுகளைச் சுற்றிலும் வைத்து இருபக்கங்களி லிருக்கும் முகடுகளை ஜாடாவாய் எடுத்து பயிரைச் சுற்றி மண் அணைத்துவிட, முன் பள்ளத்திலிருந்த பயிர் முகடுகளிலும், முகடுகளாயிருந்த இடம் தண்ணீர் பாயும் காலாகவும் ஆகிவிடும். அதற் கப்பால் களைமுளைத்தால் களைகளை அப்புறப் படுத்தி வரவேண்டுமே தவிர வேறு எருவைக்க வேண்டியதில்லை. தண்ணீர் மட்டும் நிலத்தின்பான்மைக்குப் கடும்ஈரமில்லாமலும், பயிர் வாடாமலு மிருக்கும்படி அந்தந்த நிலங்களுக்குத் தக்கவாறு இறைத்து வர வேண்டும்.

## அறுவடை செய்யுங்காலம்

அவரவர்கள் அவசரத்திற்குத் தக்கபடி புரட்டாசிமீ முதல் மார்கழி மாதம்வரை அறுவடை செய்து வருகிறார்கள். அடுத்த செற்பயிர் புரட்டாசி மாதக் கடைசியில் நட உத்தேசிப்பவர்களும், எல்லாரும் கிழங்குகள் வெட்டி விற்குமுன் மாசூல் குறைவாகக் கிடைத்தாலும் நல்ல விலைக்கு விற்கலா மென்னும் எண்ண முடையவர்களும் ரூபாய்கள் அவசரமாய்த் தேவையிருப்பவர்களும் புரட்டாசி மீ வெட்ட ஆரம்பித்து விடுகிறார்கள். இப்படிச் செய்வதால் மாசூல் பாதிபாகம் கூட கிட்டுவதரிது.

. செடியின் இலைகள் தானாக மஞ்சள் நிறமாகப் பழுத்து மாறி கீழே சாய்ந்து விடும். அப்போது தான் கிழங்குகள் வெட்டுவதற்கு லாயக்கென அறிந்து கொள்ளலாம். அப்போது வெட்டினால் தான் முழுமாசூல் அநுபவிக்கலாம்.

தாளைப் பழுத்து மஞ்சள் நிறமாகிச்சாயுமுன் சில விவசாயி கள் அவ்வாறு பயிர் மஞ்சள் நிறமாக மாறி சாய்வதற்கு சேத்துப் பட்டம் கட்டுகிறார்கள். அதாவது வாய்க்காலில் சேற்றை நன்றாய் குழப்பிக் குழைத்து நன்றாய் மெழுகி விட்டு விடுகிறார்கள். இவ்வாறு செய்வதானது மண்ணுக்குள் காற்றுப் புகாமல் செய்து விடுகிறது. எப்போது காற்று தடுக்கப் படுகிறதோ உடனே பயிர் பழுப்புத் தட்டி சாய்ந்து விடுகிறது. இதுவும் தானைப் முற்றியதாகக் கருதுவ தற்கு இடமில்லையாகையால் இம்முறையிலும் மகசூல் சற்று கம்மியா வதோடு பிற்காலம் வேறு கெடுதல்களையும் விளைவிக்கிறது. அது என்னவெனில் அப்பயிர் பழுத்துச் சாய்வதற்கு முன் சேத்துப் பட்டம் கட்டி பூசப்பட்டிருப்பதால் விசேஷமாய் களைகள் முளைக்க ஆரம்பித்து விடுகிறது. அக்களைகளை அப்புறப் படுத்தினால் பயிர் களின் வேர்களுக்குக் காற்றுப்புக இடம் ஏற்பட்டு விடுமாகையாலும் அப்படிக் காற்றுப்போனால் பயிரைப் பழுத்து சாயச்செய்யும் நோ க்கத்துடன் செய்த வேலை கைகூடாமற் போகுமாதலாலும், களைகள் வெட்டுவதில்லை. ஆகையால் களைகள் விசேஷ அபிவிருத்தியடைந்து அடுத்த பயிர் செய்யும்போது களைகளின் பாதை அதிகமாகும். ஆகையால் இயற்கையாக பழுப்பாக விடவேண்டுமே தவிர செயற் கையாகப் பழுத்து உதிரும்படிசெய்வது உசிதமல்ல.

இயற்கையாக விட்டால் அநேகமாய் மார்கழி தை மாதங்க ளில் அறுவடை செய்யலாம்.

### அறுவடை செய்வது

நிலத்தில் போதிய ஈரமில்லாவிட்டால் பேதுமானபடி மட்டத் தண்ணீர் பாய்ச்சி அல்லது அடித்து, நிலத்தில் தண்ணீர் ஊறும்படி செய்து இரண்டு மூன்று நாட்களுக்கப்பால் கூச்சான கொம்புகளின் உதவியால் கிழங்குகளைத் தூக்கி கிழங்கைச் சுற்றிலுமுள்ள வேர்களை ஆய்ந்து எரிந்துவிட்டு, களிமண் நிலமாகில் மண் கிழங்குகளைப் பிடித் துக் கொண்டிருக்குமாகையால் தண்ணீரில் கழுவி சுத்தம் செய்து ஒரு பக்கத்தில் நிழலில் காற்றாக் கொட்டி வைக்க வேண்டும்.

### 'விதைக்கிழங்கு

நல்ல பயிராயிருக்கும் இடத்தைதக்கவனித்து மற்றக்கிழங்குகளை வெட்டும்போது அந்த இடத்தில் தண்ணீர் பாய்ச்சாமலும், அந்த இடத்திலுள்ள கிழங்குகளை வெட்டாமலும் விட்டு வைத்து பங்குனி மாதம் தான் வெட்டி பத்திரப் படுத்த வேண்டும். முதலில் நடும்

போதும் முத்திய கிழங்குகளாயும், முளையு நசிய கிளங்குகளாயும் பார்த்துத் தான் நடவேண்டும். சாதாரணமாய் ஒரு ஏக்கர் நடுவதற்கு சுமார் 1000 முதல் 1500 ராத்தல் வரை கிழங்குகள் தேவையாயிருக்கும்.

### மாசூல்

பயிர் நன்றாய் விளைந்தால் ஒரு ஏக்கரிலிருந்து நட்ட இடைக்கு 10 முதல் 15 பங்கு இடைவரை அறுவடை செய்யலாம்.

### இலாபம்

பயிர் செலவையும், கிழங்கு விற்பனையையும் அந்தந்த இடங்களில் வேலையாட்கள் அகப்படுவதையும், தண்ணீர்ப் பாசன வசதியையும், கிழங்குகள் விற்பனையாகும் இடத்திற்குக் கொண்டு போகும் செலவுகளையும், சகாயமாய் அல்லது கிரயமாய் எருக்கள் அகப்படுவதையும் இன்னும் பலகாரணங்களையும் பொறுத்ததாகையால் திட்டமாய் இவ்வளவுதான் இலாபம் கிடைக்குமென்று சொல்வதற்கில்லை. ஆயினும் பயிர் சரியானபடி செய்தால் ஏக்கர் ஒன்றுக்கு 200 ரூ முதல் ரூ 300 வரை, செலவு போக லாபம் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. இத்துடன் நிற்காமல் அந்நிலத்தில் அதற்கப்பால் செய்யும் இரண்டு பயிர்களுக்கு எவ்வித எருவும் போடாமல் பயிரிட்டால் கூட அப்பயிர்கள் பூரு மேனி கொடுப்பதோடு நிலமும் நல்ல வளமுள்ளதாகி அது முதல் செழிப்புள்ள நிலமாகும். ஆகையால் குறிப்பிட்ட ஒரு நிலத்தை வளமுள்ள நிலமாக்க விரும்பினால் அந்நிலத்தில் நாம் சொன்ன பிரகாரம் ஒரு முறை கருணைக்கிழங்கு பயிரிட்டால் அப்பால் அந்நிலம் எப்பயிரும் செய்வதற்கு லாயக்கான நிலமாகுமென்பதில் கிஞ்சிற்றேனும் சந்தேகமில்லை.

### குறிப்பு

இக்கிழங்கு விதை வேண்டியவர்கள் நமக்கு எழுதுவதால் எவ்வித உபகாரமுமில்லை. அந்தந்த இலாகா விவசாய அதிகாரிகளுக்கு எழுதினால் சமீபத்தில் எங்கு அகப்படுமென்று தெரிவிப்பார்கள். அல்லது வாங்கிக் கொடுப்பார்கள். அவர்கள் அவ்வாறு தெரிவிக்கவாவது உதவி செய்யவாவது மறுத்தால் அப்பால் எமக்கு எழுதினால் தாங்களிருக்கும் இடத்திற்குச் சமீபத்தில் இன்ன இடத்தில் அகப்படுமென்று தெரிவிக்கக்கூடும்.

# SEWAGE WATER & ITS USES.

## சாக்கடைத் தண்ணீரும் அதன் உபயோகங்களும்.

ஒவ்வொரு வீட்டிலும் சாக்கடைத் தண்ணீரும் சாக்கடையும் இல்லாமலிருக்கமாட்டாது; சிறு கிராமங்களில் கூட ஒவ்வொரு வீட்டிலும் சட்டிபானை பாத்திரங்கள் சாமான்கள் முதலியன கழுவி விடும் தண்ணீர் தூரமாய் போகும்படியும் அப்படிச்செய்யாவிட்டால் அந்தத் தண்ணீர் பூமிக்குள் சுவர்ந்து அசுத்தமான காற்றையும் சுகாதாரமின்மையையும் உண்டாக்குமென்றும் எண்ணி வீடுகளுக்குச் சமீபத்தில் போக ஒட்டாமல் தடுக்கும் முயற்சிகள் செய்வதுண்டு. இன்னும் சிலர் இந்த மாதிரி ஜலத்தை எப்படி உபயோகப்படுத்தினால் நலமென்று எண்ணி அத்தண்ணீர் சேருமிடங்களில் பலன் தரக்கூடிய சில செடிகளைப் பயிர் செய்வதுமுண்டு. பெரிய பட்டணங்களில் முனிசிபாலிடியார் வீடுகளிலிருந்து கழிக்கப்பட்ட சாக்கடை ஜலம் முதலிய அசுத்தமான தண்ணீரைக் கால்கள் கட்டி அதன் மூலமாயும், குழாய்களின் மூலமாயும் பட்டணத்திற்கு சற்று தூரத்திலுள்ள நிலங்களில் போய் விழும்படி செய்து அந்த புல், காய்கறி, வாழை, போன்ற பயிர்களைச் சாகுபடி செய்து பிரயோஜனப்படுத்துவதுமுண்டு. சில பெரிய பட்டணங்களில் மனிதர்களுடைய மலஜலங்களும் இச் சாக்கடைத் தண்ணீரில் கலக்கப்பட்டும் கழுவி விடப்பட்டும் வெளியே அப்புறப்படுத்தப்படுகிறது. சில இடங்களில் இத்தண்ணீரை ஊருக்கு சமீபத்தில் போகும் ஆறுகளிலும், சமுத்திரம் சமீபத்திலிருந்தால் அச்சமுத்திரத்திலும் போய் விழும்படியும் சாதனங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. சில ஊர்களில் இத்தண்ணீர் கிணறுகள் போன்ற குட்டைகளைக் கட்டி அதில் போய் விழும்படி ஏற்பாடு செய்து அக்குட்டைகளிலிருந்து தண்ணீரை ஏத்தம் முதலிய கருவிகளாலும் இன்ஜின் முதலிய கருவிகளைக் கொண்டும் இறைத்துப் பயிர்களுக்குப் பாய்ச்சி சாகுபடி செய்கிற வழக்கமுமிருக்கிறது.

இச்சாதனங்களெல்லாம் சுகாதாரத்தைக் கவனித்து ஜனங்களுக்கு உபகாரம் செய்ய வேண்டுமென்ற கருத்துடன் செய்திருப்பவைகளே யொழிய வேறில்லை. மேல் நாடுகளில் சில வருஷங்களுக்கு முன்வரை இத்தண்ணீரை நிலங்களுக்கும் பயிர்களுக்கும் கெடுதி விளைவிக்காமல் எந்த மாதிரி உபயோகிக்கக் கூடுமென்று நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து வந்ததில் அநேகவிதமான முறைகளைக் கண்டுபிடித்துக் கையாட எவ்விதத்திலாவது சாக்கடைத் தண்ணீரில் கலந்துவரும் ஓர்வித பிசுபிசுப்பான ஒட்டுங்குணமுடைய

வஸ்துவையும் மற்ற வண்டல் போன்ற வஸ்துக்களையும் பிரித்து வெ ரும் ஜலத்தை மாத்திரம் பயிர்களுக்கு பிரயோஜனமாகும்படி உப யோகிக்க சில வழிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள், அவைகளில் சுலபமாகவும் அதிக சிலவில்லாமலும் செய்ய வேண்டிய அவ சியம் முக்கியமானது. அப்படிப்பட்ட முறைகளில் எ. பி. சி. முறை என்றது ஒன்று. அதாவது படிகாரம், ரெத்தம், கரித்தூள், முதலிய வைகள் போன்ற வஸ்துக்களை வண்டலாய் ஓடும் சாக்கடைத் தண்ணீருடன் கலந்தால் அவ்வண்டல் சீக்கிரம் கீழே படிந்து ஜலம் தெளிவாயும் அதிக வாசனை யில்லாமலும் மாறிப் போகிறதால் அம் முறையை அனேக இடங்களில் கையாடி வந்தார்கள். இவ் வாறு தெளிந்த ஜலத்தைப் பயிர்களுக்கு உபயோகித்தால் அதனால் கெடுதி சம்பவிக்கிறதில்லை யென்று அனுபவ பூர்வமாயும் தெரிந்திரு க்கிறார்கள். ஆனால் இப்போது சில வருஷங்களாக ஆக்ரா, அலகபாத்து, பெங்களூர், முதலிய ஜாஸ்தி விஸ்தீரணமுள்ள இடங்களில் சாக்கடைத் தண்ணீரால் பயிரிடும் பண்ணைகளை ஸ்தாபித்து பலனடைந்திருக்கிறார்கள். அம்முறையைக் குறித்து பின்னால் விவரிக்கப்படும்.

சாக்கடைத் தண்ணீர் என்ற பெயர் பொதுவாய் சொ ல்லப்பட்ட பெயர். இதை இரண்டுவிதமான தண்ணீர்களுக்கும் தற்காலம் உபயோகப்படுத்தப்படுகிறது. அதாவது பல பட்ட ணங்களில் திறந்த விதமாய் அமைந்திருக்கும் கால்களின் மூலமாய் அப்புறப்படுத்தப்படும் மூத்திர ஜலமும் மற்ற பாத்திரங்களை கழுவி விடப்பட்ட ஜலமும் கலந்தோடும் தண்ணீருக்கு இந்தப்பெயர் வழங்கப்படுகிறது. இந்த மாதிரி ஜலம் பயிர்களுக்காவது அல்லது நிலங்களுக்காவது உபயோகப்படுத்தப்பட்டால் அதனால் ஜாஸ் தி கெடுதல் விளைகிறதில்லை. ஏனென்றால் அத்தண்ணீரில் கழி மண்ணிலிருக்கும் பிசுபிசுப்பு போன்ற ஒட்டிக்கொள்ளும் கோந்து போன்ற வஸ்து ஜாஸ்தியா யிருப்பதால் அத்தண்ணீர் நிலங்களுக்குப் பாய்ச்சின உடன் அந்நிலத்தை இருகச் செய்து கெட்டிப்ப டுத்திவிடும். இன்னொரு விதமான சாக்கடைத் தண்ணீர் என்ன வென்றால் மேல்சொன்ன சாக்கடைக் கழிவுத் தண்ணீருடன் மனிதர்களுடைய மலமும் தண்ணீரால் கழுவப்பட்டு மூடியகால்கள் வழியாய் அப்புறப்படுத்தப்படும் தண்ணீருக்கும் வழங்கப்பட்டு வரு கிறது. இத்தண்ணீரில் முன் சொன்ன தண்ணீரில் அடங்கியிருக்கும்

வஸ்துக்களுடன் மனிதர்களின் மலமும் சேர்ந்திருப்பதுதான் வித்
தியாசம். இந்த மலமானது தண்ணீருடன் பிசைந்துகரைத்து வை
த்த வஸ்துபோல் மண்டி போன்ற தண்ணீராயிருப்பதால் இஜ்ஜலம்
நிலத்தில் பாய்ந்த உடன் அதிலிருக்கும் வண்டல் மண்டி நில
த்தில் படிந்து அத்தண்ணீர் ஆவியாய் மாறின உடன் அந்நிலத்தில்
படிந்த வண்டல் போன்ற வஸ்து நிலத்தை இருகச்செய்து
கெட்டிப்படுத்தி நிலத்திற்கு கெடுதியை விளைவிப்பதுடன் துர்நாற்ற
த்தையும் கொடுத்து சுகாதாரக் கெடுதலையும் உண்டாக்கஇடம்
கொடுக்கிறது. ஆகையால் இம்மண்டி போன்ற வண்டல் அத்தண்
ணீரிலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டியது அத்யாவசியம்.

மேல் குறிப்பிட்ட கெடுதல்களுடன் மாத்திரம் போகாமல் இத்
தண்ணீரைப் பயிர்களுக்கு உபயோகிப்பதில் இன்னமொரு கஷ்
டமுமிருக்கிறது, அதுஎன்னவென்றால் பெரும்பான்மையாய்ப்பயிர்
களுக்கு குறித்த நாட்களிலும் காலங்களிலும் மாத்திரம் தண்
ணீர் தேவையே தவிர சதாகாலமும் தண்ணீர் அவசியமில்லை.
இதுபோல்தான் அவைகளுக்கு எருவின் அவசியமும் நேரி
டுகிறது. இத்தண்ணீரில் எருச்சத்துகள் அடங்கி யிருப்பதால்
அத்தண்ணீரைப் பயிர்களுக்கு சதா உபயோகப்படுத்துவதினால்
ஒரு பயிருக்கு எவ்வளவு எரு சத்தும் தண்ணீரும் தேவை
யோ அதற்கு ஜாஸ்தி கிடைப்பதாலும் கெடுதல் சம்பவிக்கிறது.
அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகுமென்ற பழமொழி இவ்
விஷயத்திற்கு ரெம்பவும் பொருந்தும். மனிதர் வேண்டிய அளவு
க்கு மேல் புசித்தால் அஜீரணத்தை உண்டாக்கி கெடுதலை விளைவிப்
பதுபோல் பயிர்களுக்கும் வேண்டிய அளவுக்கு அதிகம் ஆனால் திட்
டமாய் கெடுதலை உண்டுபண்ணும், இக்காரணத்தைப் பற்றிதான்
சாக்கடைத் தண்ணீர் சாகுபடிக்காக உபயோகப்படுத்துவதில்
பிரயோஜனமுண்டென்றுதெரிந்திருந்தும் அதைக் கிரமமாயும் கெடு
தல் சம்பவிக்காமலும் உபயோகப்படுத்தி பலன் அடைய ஏராளமா
னதும் விசாலமானதும் விஸ்தீரணமுள்ளதுமான நிலமிருந்தால் மட்
டும் செய்யக்கூடும். இப்படி விஸ்தாரமான நிலம் அமைவது அனேக
இடங்களில் சாத்தியப்படாதாகையால் இத்தண்ணீர் அனேக இடங்
களிலும் பட்டணங்களிலும் அவமாயும் பிரயோஜனப்படாமலும்
போகும்படி செய்கிறார்கள், இக்காரணத்தினால் சுகாதாரக் குறை
வும் நேர்வதால் தொத்து வியாதிகள் பரவி அனேக கஷ்டங்களும்
நஷ்டங்களும் நேர இடமிருக்கிறது.

தண்ணீருடன் கலந்து காரத்தைக் குறைக்காமல் பயிர்களுக்கு உபயோகித்தால் இட்டமாய்க் கெடுதலே சம்பவிக்கிறதென்று பஞ்சாப்புக்கடுத்த லையால்பூரில் செய்த பரீட்சைகளால் தெரிகிறது. தண்ணீர்விட்டு விராவிக்கலக்கி உபயோகப்படுத்தாமல் போனால் சாக்கடைத்தண்ணீரிலுள்ள தனி சத்துவாகிய அம்மோனியா போன்றவைகளால் பயிர்கள் கருகிப் போவதுடன் இச்சத்து அளவுக்கு மிஞ்சி பயிர்களுக்குக் கிடைப்பதால் அதே ஒரு நஞ்சுபோல் பயிர்களைக் கொன்றுவிட ஏதுவாகிறது. இத்துடன் போகாமல் தனி சாக்கடைத் தண்ணீரிலிருக்கும் இந்திரிய வஸ்து அடங்கிய சத்து உடனே தாமதமின்றி பிராண வாயுவுடன் கலந்து எரிந்து போகக் கூடிய ஸ்திதியிலிருப்பதால் சாக்கடைத் தண்ணீர் பாயும் நிலத்திலிருக்கும் தழை சத்தை அதாவது நைட்ரேட் வடிவமாயிருக்கும் உப்புகார உரச்சத்தையும் குறைத்துவிடுகிறது. ஆகையால் இப்போக்கொத்த தனிச் சாக்கடைத் தண்ணீருடன் வாய்க்கால் ஜலமாவது கிணற்று ஜலமாவது கலந்து அதை உபயோகித்தால் அத்தண்ணீருக்குள் பிராணவாயு கரைந்திருக்கும் ஸ்திதியிலிருக்குமாகையால் முன் சொன்ன கெடுதல்கள் சம்பவிக்கமாட்டாது. இக்காரணத்தால்தான் சாக்கடைத் தண்ணீரைத் தனியாய் உபயோகிக்காமல் எப்போதும் பாசனத் தண்ணீருடன் கலந்து காரத்தைக் குறைத்து உபயோகப்படுத்த வேண்டுமென்றும் அப்போதுதான் தக்கபலன் கிட்டுமென்றும் நிபுணர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். அனுபவத்திலும் இது உண்மையான விஷயமாயும் தெரிகிறது. பூனா ஐதாபாத் முதலிய இடங்களில் இக்காரணத்தால்தான் சாக்கடைத் தண்ணீர் உபயோகப்படுத்தப்பட்ட பண்ணைகளில் குறைத்து பாசானத் தண்ணீருடன் சேர்த்து உபயோகப்படுத்தப் படுகிறது.

இப்படிச் சாக்கடைத் தண்ணீரை மற்றத் தண்ணீருடன்கலந்து உபயோகிப்பதிலும் ஜனங்களுக்கு இன்னமொரு இடைஞ்சல் இருக்கிறது. அதென்னவென்றால் சாக்கடைத் தண்ணீரை மற்றத் தண்ணீருடன் கலந்து உபயோகப்படுத்தும்போது தனிச் சாக்கடைத் தண்ணீர் உபயோகப்படுத்த வேண்டிய அளவு விஸ்தீரணத்திற்கு இரட்டிப்பு அல்லது மூன்று பங்கு விஸ்தீரணமுள்ள பாசன நிலம் வேண்டிய தவசியம். இப்போர்ப்பட்ட வசதியுள்ள நிலங்களின் விஸ்தீரணம் எப்போதும் எங்கும் குறைச்சலாயிருப்பதினால்

இடைஞ்சலும் கஷ்டமும் நேரிடுகிறது. மணல் பாங்கான நிலமும் சூரிய வெப்பத்தினால் ஜலத்தியில் ஜலம் ஆவியாய் மறையக்கூடிய இடங்களில் மட்டும் வசதிகள் சரியாயிருக்கலாம். மற்றப்படி களிக்காலுள்ளவும் தண்ணீர் சுலபமாய் சூரிய உஷ்ண சக்தியால் கிரகிக்கக் கூடாத இடங்களிலும் இத்தண்ணீரை உபயோகப்படுத்தப் போதுமான விஸ்தீரணம் கிடைப்பது அரிது. மழை காலத்திலும் மழைப் பதம் ஜாஸ்தியா யமைந்துள்ள இடங்களில் இக்கஷ்டம் ஜாஸ்தி சம்பவிக்கும். மணல்பாங்கான நிலவசதி ஏராளமாயும் சூரிய உதவியும் அமையப்பெற்ற கராச்சிபோன்ற இடங்களில் மேல் சொன்ன கஷ்டங்களுக்கு இடமில்லை. ஆனால் களிமண் தரை ஜாஸ்தியாயுள்ள நாக்பூரைப் போன்ற கரிசல் நிலங்களில் இச்சாக்கடைத் தண்ணீர் உபயோகப்படுத்தி நிலம் ஜாஸ்தி இறுகிக் கெடுதலே சம்பவித்திருக்கிறது அனேகருக்குத் தெரியும். இப்படி நிலம் ஒரு தரம் கெட்டுப் போனால் அதை மறுபடியும் சீர்திருத்திக் கொண்டு வருதல் அனேகமாய் முடியாத விஷயம். மெஸ்தர் ஹச்சின்சன் என்ற நிபுணர் செய்த ஆராய்ச்சிகளில் இக்கெடுதல், சாக்கடைத் தண்ணீரில் இயல்பிலேயே கலந்திருக்கும் ஒட்டக் கூடிய பிசின் போன்ற வஸ்துவால் மட்டும் உண்டானதுடன் போகாமல் இன்னொரு விதத்திலும் கெடுதல் சம்பவிக்கிறதென்று கண்டு பிடித்திருக்கிறார். இத்தண்ணீர் பாய்ச்சிய நிலங்களில் கண்ணுக்குப் புலப்படாத சிற்றுயிர்கள் உண்டாவதாகவும் அச்சிற்றுயிர்கள் பல்கிப் பெருகும் சமயத்தில் ஒர்வித மெழுகுபோன்ற வஸ்து அவைகளின் உடம்பிலிருந்து உண்டாகிறதென்றும் அம்மெழுகுபோன்ற வளவளப்புள்ள வஸ்து நிலத்தின் மேல் படிகிறதாலும் நிலம் கெட்டிப்பட்டு இறுகிக் கெட்டுப் போகிறதென்பதே தான். இப்படி நிலம் இறுகிப் போகும் குணத்தினால் காற்று நிலத்துக்குள் புக இடமில்லாமல் போகிறது. நல்ல காற்றுவேருள் புகுந்து வேலை செய்யாமல் போனால் நிலத்திலிருக்கும் நைட்ரஜன் சத்துமாகிய கரையக்கூடாத ஸ்திதியிலிருக்கும் தழை சத்தை சுலபமாய்க் கரைந்து செடிகளுக்குஉபயோகப்படும்படியான நைட்ரேட்ரூபமாய் மாறக்கூடிய சக்தியைப்பெற்றதும்காற்றில் வசித்துப்பல்கிப்பெருகக்கூடியதுமான அணுக்கிருமிகள்நிலத்துள் சாற்றுப்புக மார்க்கமில்லாத காரணம் பற்றி அப்படி. நைட்ரேட்டாய் மாற இடமில்லாமல் போனதினால் நிலச் சத்து கெட்டுப் போகிறதென்றும் கண்டு பிடித்திருக்கிறார். நிலத்

இருகி உள்ளே காற்றுப்புக மார்க்கமில்லாமலிருக்கும் காரண த்தினால் காற்றின் உதவி கொண்டு பல்கி விருத்தியாகாமல், காற்றின் உதவி சற்றேனும் தேவையில்லாத சந்தர்ப்பங்களில் பல்கிப்பெருகும் ஓர்வித அணுக்கிருமிகள் பல்கிப்பெருகி அவைகள் வேலை செய்வதில் நிலத்திலுள்ள தழைச்சத்து காற்றுரூபமாய் சிதறப் படுவதால் ஆகாயத்தில் நஷ்டமடைந்து போவதாயும் அபிப்பிராயப் பட்டிருக்கிறார். இத்துடன் ஹௌவார்ட் என்னும் நிபுணர் இப்படிக் காற்றின் உதவியின்றிப் பல்கிப் பெருகும் சிற்றுயிர்கள் நிலத்தைக் காரமாக்கி விடுகிறதென்றும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். இது அனுபவத்திலும் நிஜமாகத் தெரிகிறது. எங்கெங்கே சாக்கடைத் தண்ணீரை மற்ற ஜலத்துடன் கலக்காமல் தனியாய் உபயோகப்படுத்தப் படுகிறதோ அப்பேர்ப்பட்ட நிலம் மணல் சாரியாயில்லாத பக்ஷத்தில் அந்நிலம் கெட்டிப்பட்டு இருகிப்போவதுடன் அது களர்நிலம்போல்மாரி உப்பு பொங்கினாற்போல் குணமடைந்து அதில் உண்டாகும் பயிர்களுக்குக் கெடுதலை விளைவிக்கிறது.

சில இடங்களில் தனிச்சாக்கடைத் தண்ணீர் உபயோகித்த பயிர்களின் தண்டில் ஓர்வித நோய் போன்ற கெடுதல் சம்பவித்து அதனால் அதை உணவாக உட்கொள்ளும் ஜெந்துக்களுக்கும் அதன்கெடுதி பரவுகிறதென்றும் ரூபிக்கப்பட்டிருக்கிறது. இக்காரணம் பற்றிதான் சாக்கடைத் தண்ணீரை உபயோகித்து உண்டாகிய காய்கறிகளையும் கீரைகளையும் சரியானபடி வேகவைத்து தண்ணீர் வடிக்காமல் சாப்பிட்டால் கெடுதல் உண்டாகுமென்று வைத்திய சாஸ்திரிகள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். மேல்சொன்ன காரணங்களினால்தான் சாக்கடைத் தண்ணீரைப் பயிர்களுக்கு உபயோகப்படுத்துமுன் அத்தண்ணீரிலுள்ள பிசுபிசுப்பானவும் வண்டல் போன்ற மண்டி வஸ்துவையும் நீக்க உபாயங்கள் தேடி அத்தண்ணீரை மற்ற ஜலத்துடன் கலந்து அதன் காரத்தைக் குறைத்துப் பயிர்களுக்குப் பாய்ச்சி விவசாயிகள் பலனடைய வேண்டுமென்பது விவசாய அபிவிருத்தியில் நோக்கமுடையவர்களின் கருத்து. அடுத்த சஞ்சிகையில் சீமை தேசத்தார் இவ்விஷயத்தில் என்ன விதமாய் கையாடி பலனடைகிறார்களென்பதையும் பெங்களூர் முதலிய பெரிய பட்டணங்களில் இச்சாக்கடைத் தண்ணீரிலுள்ள பிசுபிசுப்பான வண்டல் குணத்தை மாற்ற தற்காலம் என்னவிதம் செய்து பலனடைகிறார்களென்றும் தெரிவிக்கப்படும்.

## Exhibition Motor of The Agricultural Department.

### சென்னை விவசாய டிபார்ட்மெண்டார் திட்டம் செய்திருக்கும் கண்காக்ஷி மோட்டார்

இது காறும் விவசாய விளக்கத்திற்காக சென்னை விவசாய அதிகாரிகள் கிராமங்களில்நடக்கும் உற்சவகாலங்களிலும் சந்தைகளிலும் கலெக்டர் துரைகளின் ஜமாபந்திகாலங்களிலும் விவசாய முறைகளைக் கண்காக்ஷி ரூபமாயும், திரை படங்கள் மூலமாயும் காட்டி வந்தார்கள். இதர தேசங்களில் ரெயில் வண்டி ஒன்றில் கண்காக்ஷியை அமைப்பித்து ரெயில்வே ஸ்டேஷன்கள் தோறும் நிறுத்தி குடியானவர்களுக்கு முன் அறிக்கை செய்து வரவழைத்து திரை படங்கள் மூலமாய் காட்டி வந்தார்கள். ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து வெகு தூரத்தில் வசிக்கிற குடியானவர்கள் ரெயில் வண்டியில் அமைக்கப்பட்ட காக்ஷியை வந்து பார்ப்பதற்கு இடமில்லாமல் இருக்கிறது. இதை உத்தேசித்து நமது டிப்பார்ட்மெண்டார் மோட்டார் மூலமாக கண்காக்ஷியைக் காட்டுவதற்காக ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இந்த மோட்டாரில் நெல் நிபுணர், பருத்தி நிபுணர், பூச்சி சாஸ்திரி, பூஞ்சாண சாஸ்திரி, விவசாய நிபுணர் முதலியவர்கள் குடியானவர்களுடைய நன்மைக்காக அறிவிக்க வேண்டிய விஷயங்கள் எல்லாம் படங்கள், பொருள்கள், மூலமாகவும், அமைத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. கண்காக்ஷி மோட்டாரை பல பகுதிகளாகப்பிரித்து, ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு நிபுணர் குடியானவர்களுக்கு அறிவிக்க வேண்டியவற்றை அமைத்திருக்கிறார்கள். முதலாவதாக,

பூச்சி சாஸ்திரி:—பழவர்க்கங்களிலும் பல பயிர்களிலும், விழுந்து நாசம் செய்யும் பூச்சிகளின் ஜீவியசரித்திரத்தைத் தத்ரூபமாகக் காண்பித்திருக்கிறார். இதோடு குடியானவர்களுக்கு உபகாரமாயுள்ள பக்ஷிகளையும், பூச்சிகளையும் சாண்பித்திருக்கிறார். இந்தப் பூச்சிகளைத் தொலைப்பதற்கு வேண்டிய மருந்துகளையும், தடுக்கும்படியான முறைகளையும், விவரமாகச் சாண்பிக்கப்பட்டிருக்கிறது.

பூஞ்சாண சாஸ்திரி:—மிளகாய் செடிகளில் விழும் புள்ளிநோயைப்பற்றியும், கரும்பில் சிவப்பு ஓடும் நோயைப்பற்றியும், பாக்கு தென்னைமரம் முதலியவற்றிற்கு வரும் அழுகல் நோயைப்பற்றியும், சோளத்தில் கரிப்பூட்டை நோயைப்பற்றியும், மேற்படி நோய்களைத் தடுக்கும் முறைகளையும் நோய்வந்த காலத்தில் செய்யவேண்டிய சிகிச்சைகளைப்பற்றியும், அவைகளுக்கு வேண்டிய மருந்துகளைச் சேர்க்

கும் விஷயத்தையும், குடியானவர்கள் எளிதில் அறிந்து கொள்ளும் படி அமைக்கப் பட்டிருக்கிறது.

மூன்றாவதாக, ரசாயன சாஸ்திரி பலவிதமான இயற்கை எருவையும், சேர்க்கை எருவையும், ரசாயன எருக்களையும், பாசூல்களுக்கு வேண்டிய சத்தான ஆகாரத்தையும் காட்டியுள்ளார். மேலும் மாடு கட்டும் மூன்று விதமான கொட்டகைகளையும் ஒவ்வொன்றின் மூலம் எரு சேர்ப்பதையும், அப்படி எருசேர்ப்பதின் முறைகளினால் ஏற்படும் அனுகூலம் பிரதிகூலங்களையும் செவ்வனே காட்டியிருக்கிறார். இன்னும் மண்ணின் சத்தையும், எருக்களின் சத்தையும், மனிதர்களும், மிருகங்களும், பயிர்களும் உட்கொள்ள வேண்டிய உணவையும் அவற்றின் அளவையும் படரூபமாகக் காட்டியிருக்கின்றார்.

நான்காவது:—எட்டாவது சர்க்கில் கோயம்புத்தூரிலுள்ள விவசாய டிப்டி டைரக்டர் நாட்டு கலப்பை, இருப்புக் கலப்பை, முள் பலுவு, சால்கலப்பை, வெட்டும் ஜூலியர் கலப்பை, சிந்து வாய் அடைப்பு, ஒற்றைக்கவலை, பெல்லாரிக்கவலை முதலியவற்றை சிறிய அளவில் மாடல்களாகச்செய்து காட்டியிருக்கிறார்-இன்னும் சீமைகோழியையும் அவற்றின் முட்டைகளையும், மாட்டுத் தீவனத்திற்கான பயிரின் விதைகளையும், பசுந்தாள் எருவின் விதைகளையும், எண்ணை எடுக்கிற விதைகளையும், வெல்லம் முதலிய வற்றையும் காண்பித்திருக்கிறார்.

ஐந்தாவதாகப் பருத்திநிபுணர் கருங்கண்ணி, உப்பம், கம்போடியாவின் பொருக்கு விதைகளையும், பருத்தி சொளைகளையும், பஞ்சு இழைகளையும், பருத்தியில் வெவ்வேறு குணத்திற்காக ஒட்டுச் சேர்த்து எடுத்த ஒட்டுப்பருத்தியையும் காண்பித்திருக்கிறார்.

ஆறாவது, தானிய நிபுணர், வெள்ளைச்சோளம், மஞ்சள் சோளம் தினை, ராகி, குதிரைவாலி முதலியவற்றின் பொருக்குக் கதிர்களையும், தினைராகி முதலிய வற்றின் பல தினுசுகளையும் காண்பித்திருக்கிறார்.

(7) கடைசியாக நெல் நிபுணர் கோயமுத்தூரிலும் ஆடுதுறையிலும் வேலை செய்ததின் பலனாகக் கிடைத்த பொருக்கு நெல், ஒட்டு நெல் தினுசுகளை நெல்லும் அரிசியுமாக விளக்கியிருக்கின்றார்.

இந்தக் கண்காக்ஷி வண்டி போகும் இடங்களுக்கெல்லாம் கூடவே போய் குடியானவர்கள் மனதில் பதியும்படி காட்டுவதற்காக ஒரு விவசாய டிமான்ஸ்டிரேட்டரை நியமித்திருக்கிறார்கள். அவரும் அந்தந்த இலாகா டிமான்ஸ்டிரேட்டர்களும் இதர சிப்பந்திகளும் கூடவே போகவேண்டிய வசதிக்காக பிரத்தியேகமான வேறு ஒரு

மோட்டார் வண்டியும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இந்த வண்டியில் சார்ந்த விளக்கு போட்டு இரவு காலங்களில் மாஜிக் லாண்டர்ன் மூல மாய் விவசாயப் படங்கள் அறிவிக்கும் படியான வசதிகள் ஏற்படுத்த ப்பட்டிருக்கிறது. கண்காக்ஷி மோட்டார் வண்டியை முன்னால் நிறுத்தி அதில் படங்கள் காட்டுவதற்கான வெள்ளைத் துணி படுதா கட்டு வதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பின்னால் நிறுத்தப்படும் ஆள் ஏறும் மோட்டார் வண்டியிலிருந்து வெளிச்சம்போட்டு பட ங்கள் காட்டப்படுகிறது. சென்ற இரண்டு வாரங்களாக இந்த வண் டிகளை கோயமுத்தூருக்கு அருகாமையிலுள்ள சில ஊர்களுக்குச் சந்தை கூடும் காலங்களில் கொண்டுபோய்க் காண்பித்ததில் ஏராள மான ஜனங்கள் வந்து பார்த்து விவசாய டிபார்ட்டு மெண்டாருடை ய நிலைமையும், அவர்கள் நடத்தியிருக்கும் வேலைகளையும், அவர்களால் குடியானவர்களுக்கு ஏற்படக் கூடிய லாபங்களையும், குடியானவர்கள் எந்த விதத்தில் தாங்கள் முன்னேற்றம் அடையலாம் என்பதையும் உணர்ந்ததாக அறிகிறோம். இம்முறையில் உண்மையாகவே குடியா னவர்கள் சீர்திருந்திய முறைகளைக் கையாளும்படி தூண்டப்படுவார்க ளா வென்று நாம் சந்தேகிக்கிறோம்.

## NEWS & NOTES

### குறிப்புகள்

### மரம் வளர்த்தல்

பம்பாய்ப் பகுதியில் பீஜப்பூர் ஜில்லாவில் இந்தியக் கலெக்டராயுள்ள விட எஸ். நாயக் கென்பவர் மரம் வளர்க்கும் நன்முயற்சியில் பெரிதும் ஊக்க முள்ளவராயிருக்கிறார்: அந்த ஜில்லாவில் பஞ்சம் வராது தடுப்பதற்காக ஒரு சங்கம் ஏற்பட்டு விவசாய வளர்ச்சிக்குரிய பலதுறைகளிலும் வேலை செய்கிறார்கள். மேலும் அவர்கள் ஜில்லா யெங்கும் மரங்களை வைத்து வளர்க்கும் முறையில் ஈடுபட்டிருக்கிறார்களாம். மாஜிஸ்திரேட்டுக்கள் கிராம உத் யோகஸ்தர்கள், மிராசுதார்கள் முதலியவர்களைத் துணைக்கொண்டு இது வரை ஒன்பது லட்சம் மரங்களை நட்டு வளர்த்திருக்கிறார்களாம். மரம் வளர்ப்பதால் காட்டிலே வெப்பம் குறைந்து பொருந்திய சீதோஷ் ணம் ஏற்படுகிறது. மழை பொழிவதற்கும் மரங்களும் மரங்கள் நிறைந்த கா டுகளும் மலைகளுமே பெரிதும் காரணமாயிருக்கின்றன. மரங்களும் காடு களும் பல காரணங்களால் அழிந்து வரும் இந்நாளில் நாடெங்கும் மரம் வளர்த்தலை ஒரு கடமையாகக் கொள்ள வேண்டும்.

புகையிலையினால் நமது நாட்டிலிருந்து ஒவ்வோராண்டும் இரண்டு கோடியே பதின்மூன்று லட்சம் ரூபாய்கள் இங்கிலாந்திற்குச் செல்கிறதாம்.

மெக்சிகோ நாட்டில் சிறுகை மரம் என்று ஒரு மரம் இருக்கிறதாம் இந்த மரத்தின் பூக்களின் நடுவே குழந்தைகள் ஐந்து விரல்கள் போல் உறுப்புகள் இருக்கின்றனவாம்.

## Veterinary Section Cancer-in-Cattle

### கால்நடைப் பகுதி

### கால்நடைகளில் புற்றுநோய்

இதுவரையில் புற்று நோயால் மனிதர்கள் மட்டும் பிடிக்கப்பட்டு கஷ்டமடைந்திருப்பதாகப் பார்த்தும் கேட்டும் இருக்கிறோம். இப்புற்று நோய் ஆரம்பமான உடனேயே புற்று நோயெனக் கண்டுபிடித்து, சிகிச்சை செய்து நிவர்த்தித்தாலொழிய அநேகமாய் குணமாவதில்லையென்றே சொல்லவேண்டும்.

சாதாரணமாய் மனிதர்களுடைய உதடுகளிலும், கண்புருவங்களிலும், ஆண்குறி பெண்குறிகளிலும், உண்டாவது வழக்கம்.

முதலில் அந்நோயால் பிடிக்கப்பட்ட பாகம் சற்று வீங்கியிருப்பதாகக் காணப்படும். அப்பாகத்தைச் சொரிவதனாலாவது அல்லது வேறு விதமாயாவது காயம் ஏற்பட்டு இரத்தம் வந்துவிட்டால் அதில் உடனே மறுவு ஏற்படுகிறது. அந்த மறுவை அப்புறப்படுத்தப் படுத்த மருவைச் சுற்றிலுமுள்ள பாகத்திற்கு இந்நோய் பரவி நாளாவிர்த்தியில் அந்த பாகத்தையே அழுகவைத்து இரணம் ஆறாதபடி செய்து கடைசியாக ஆபத்தில் முடிவாகிறது.

இப்போது இதேமாதிரி வியாதி சென்னை இராஜதானியிலுள்ள கால் நடைகளுக்கும் வருவதாகக் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. சாதாரணமாய்க் கால் நடைகளுக்குக் கண்களிலும், கொம்பின் அடிபாகத்திலும் பொதுவாகவும், இதர பாகங்களில் அபூர்வமாயும் வருகிறது.

கொம்பின் அடியில் அவ்வியாதி ஆரம்பமாகும்போது வெவ்வேறு மாடுகளுக்கு வெவ்வேறு விதமாய் உண்டாகிறது. சில மாடுகளுக்கு இந்நோய் ஆரம்பமானவுடன் ஒருகொம்பு ஆட்டம் கொடுக்க ஆரம்பித்து அக்கொம்பின்மேல் ஏதாவது லேசாய்பட்டவுடன் கொம்பு முறிந்து விழுந்து விடுகிறது. உடனே அடிபாகத்தைப் பார்த்தால் புத்து நோயால் பிடிக்கப்பட்ட மனிதர்களுக்கிருக்கும் மறுக்கலந்த ரணம்மாதிரி இருப்பதாகத் தெரிகிறது. அந்த பாகத்தைத் தொட்டாலும் அதன் மேல் இலேசாய் அடிபட்டாலும் அபாரமாய் இரத்தம் வடிய ஆரம்பித்து விடுகிறது. சிலமாடுகளில் கொம்பின் அடிபாகத்தின் வெளியிலும், கொம்பைச் சுற்றிலும் ரணமுண்டாகிறது. ஜல்தியில் இரணம் சுற்றிலும் பரவிவிடுகிறது.

வேறுசில மாடுகளில் கொம்பின் நடுவிலாவது அல்லது மூன்றிலொரு பாகத்திலாவது கொம்பு கடினமாயிராமல் மிருதுவாயிருப்பதோடு அமுக்கின மாத்திரத்தில் இரத்தம் வடிய ஆரம்பிக்கிறது.

ஆடுமாடுகளின் கண்களில் அந்நோய் பரவுவதற்குமுன் கண் ஓரத்தில் வடு உண்டாவதுபோல் காணப் படுகிறது. அந்த வடு ஒரு சிறு பட்டாணி அளவு இருக்கிறது. இருக்க இருக்க அது பெரிதாகி அதிகமாய்த் தினவு கொடுப்பதால் மாடுகள் பக்கத்திலிருக்கும் மரங்களிலும் சுவர்களிலும் தேய்க்கிறது. தேய்த்தஉடன் இரத்தம் அமோகமாய் வடிய ஆரம்பிக்கிறது. இது பெரிதாகப் பெரிதாக இந்த பட்டாணிபோன்ற ரணம் பெரிதாவதால் கண்மணியில் அழுக்கியதைப்போல்தோன்றி தேய்க்கத்தேய்க்க கண் மணிபூராவுமே கெட்டுப் போகிறது. அதிலிருந்து வழியும் இரத்தமும்தண்ணீரும் எங்கெங்கு விழுகிறதோ அந்த இடமெல்லாம் புண்ணாகி விடுகிறது.

பூதக்கண்ணாடியி னுதவியால் இந்த வியாதியால் பீடிக்கப் பட்ட பாகத்திலிருந்து எடுக்கப்பட்ட வஸ்துக்களையும் இவ்வியாதியால் பீடிக்கப்பட்ட மனிதர்களின் வியாதிப்பட்ட பாகத்திலிருந்து எடுக்கப் பட்ட வஸ்துக்களையும் சோதனைசெய்துபார்த்ததில்இரண்டும் ஒரேமாதிரியாய்எந்தவிஷயத்திலும் வித்யாசமில்லாமலிருப்பதாகத்தெரிகிறது.

1923-ம் வருஷம் மேமீ 1உயிலிருந்து 1928 ம் வருஷம் ஏப்ரல் மீ 1உ வரை சென்னை வெட்டரினரிகாலேஜ் புரொபஸரான ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி ஐயர் அவர்களால் இந்நோய் 165 ஆடுமாடுகளுக்கும் 9 குதிரைகளுக்கும், ஒரு வெள்ளாட்டிற்கும் 7 நாய்களுக்கும், வந்ததாகத் திட்டமாய் சோதித்து ஸ்திரஞ் செய்யப்பட்டிருக்கிறது.

இந்நோய் இப்போது கொஞ்சம் கொஞ்சமாய்ப் பரவி வருவதால், நாம் மேலே சொன்ன அடையாளமுள்ள நோய் எங்காவது இருக்கக் கண்டால் அவ்விலாகா, கால்நடை இன்ஸ்பெக்டருக்காவது அவர் இருக்கும் இடம் தெரியாவிட்டால் அந்த இலாகா விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களுக்காவது இவ்விஷயத்தைத் தெரிவித்தால் அவர்கள் உடனே தக்க உத்தியோகஸ்தரை வரவழைத்து சோதித்துப் பார்த்துக் கூடுமானால் சிகிச்சை செய்தும், இல்லாவிட்டால் இதர மாடுகளுக்கு இந்த வியாதி பரவாத மார்க்கங்களைத் தெரிவித்தும் உதவி புரிவார்கள். அந்த உத்தியோகஸ்தர் வரப்போக ஆகும் செலவுகளை கவர்ண்மெண்டாரே கொடுப்பார்களாதலால் கிருஷிகருக்குத் தெரிவிக்கப்பிடிக்கும் தபால் கூலியைத்தவிர வேறு செலவு கிடையாது. இந்த நோய் பரவாதபடி தடுப்பதுஒவ்வொரு கிருஷிகருடைய கடமை யென்பதைக் கவனிக்கக் கோருகிறோம்.

தென்னை

11-ம் வாலம் 41ம் பக்கத்தொடர்ச்சி

பிழைதிருத்தம்

10-ம் வாலம் 252 ம்பக்கம் 1 வது பாரா முடிந்தவுடன் பின்வருமாறு சேர்த்துக் கொள்க.

தென்னை யுரிமட்டையி லிருக்கிற சவரி பிய்த்து சொற்பம் சவரி எடுத்து முந்திரிக்கொட்டை (அண்டிமா) எண்ணெயில் நனைத்து தென்னை தலைமட்டை இடைவெளியில் 4-5 மட்டைகளில் வைக்கவும். வண்டு முந்திரி எண்ணை விகார வாசனை பிடியாமல் கிட்ட வரமாட்டாது. முந்திரிக் கொட்டையை இருப்பு சட்டியில் வருக்க எண்ணெய் கசிந்து வரும். எண்ணெய் வரவர இருத்து ஒரு பாத்திரத்தில் விட்டு ஆறியவுடன் சீசாவிலடைக்கவும். கொட்டை செம்பிறமாய் வருக்க வேணும்: கருகிவிடில் பருப்பு உபகாரப் படாமல் முருகிக் கெட்டுவிடும். சீசாவிலுள்ள முந்திரி எண்ணெய் வேண்டிய போது தினம் தென்னங் கண்ணில் வண்டு சேறாதிருக்க முந்திரி எண்ணெய் உதவும். வறுத்த கொட்டையை நெல்லுமி, வரகு, சோளம், கம்பு, உமியிலாவது, புழுதியிலாவது, கலந்து, பிரட்டி எண்ணெய் போக்கி கொட்டை உடைத்து பருப்பு எடுக்கவேணும். முந்திரி எண்ணெய் கையில் பட்டால் பொத்து புண்ணாகும். எண்ணெயை ஜாக்கிரதையாய் உபயோகிக்கவும்.

11ம் வால திருத்தம்

| பக்கம் | பாரா | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 36 | 2 | 17 | விருக்கும், என்றவுடன் | விருக்கும், உடைத்தவன்கர்ட்டைப்பார்- பயிரழியாமல் செழிப்பாகவிருக்கும் (மெய்த்தவன் மாட்டைப்பார்)மாடு புஷ்டியாயிருக்கும்என்றமுதுமொழியை தஞ்சை ஜில்லா மிராசுதார்கள் கவனிப்பதில்லை. |
| 37 | 3 | 2 | 246—12—4—என்பதை | தவறுதலாக பிரசுரமாய்விட்டது. பூரா வடித்து விடுக. |
| 38 | 2 | 1 | கண்ணெடுப்பதில் கண்ணில் | 3 கண்ணிருப்பதில் 1கண்ணில் |
| | ஷை | 2 | தோம் | தோடும் |
| 38 | 3 | 1 | சுருங்கியுடன் | முளை சுருங்கி சதையுடன் |
| ஷை | ஷை | 4 | தோட்ல் | தோட்டில் |
| ஷை | 3 | 5 | சுக்கு | சுருக்கு |
| 39 | 3 | 2 | பகன்றும்கிடங்கடி | பகன்றும் கிடங்கடி |
| 41 | 1 | | புஸ்யான | புஷ்டியான |

40-ம் பக்கம் அடிக்குறிப்பில் மரங்களின் சீதோஷ்ண ங்கவனிக்கும்படி கனம் பத்திராசிரியர் விரும்பியுள்ளார்.

புங்கு, புளி, உஷ்ணம்; பூவரசு, ஆல், குளிர்ச்சை என்று பொதுக் கொள்கையுண்டு. ஒவ்வோர் மரத்தின் சீதோஷ்ண குணம் தாவர சாஸ்திரியார் விஸ்தரிப்பர். நம்மால் நிச்சயிக்க முடியாது. மரங்களின் சீதோஷ்ணம் பிராணிகளுக்காக வேற்பட்டது. ஆல் குளிர்ச்சையானாலும் அதன் நிழலில் புல் கூட முளையாது. நிழலடர்ச்சியுள்ள மாநிழலில் யாதொரு பயிருமுண்டாகாது. அகத்தி நிழலில் வெற்றிலையும் வாழை நிழலில் தென்னையும் பரிபாலிக்கு முறையைத் தழுவி நிழலடர்வது குறைந்த தூங்குமூஞ்சி நிழலில் விசேஷ இனி சவைக்கலாமென கூற நேர்ந்தது. தூங்குமூஞ்சி கிளைநெருங்கினால் கவாத் செய்து கலப்பிக்கலாம். அதனாலந்த மரத்துக் கானிவரு.

41ம் பக்கம் அடிக்குறிப்பில் அகத்திவேர் படரும் விஸ்தீரணமும் தூங்குமூஞ்சி மரவேர் படரும் விஸ்தீரணமும் எவ்வாறுவ்வு மென்றும் அகத்தி நிழலுக்காக வாழைகலக்கப்போடின் தூங்குமூஞ்சி வேர் படரும் விஸ்தீரணத்தால் விசேஷ செடி நடும் முறை எவ்வாறென்றும் கனம் பத்திராசிரியர் வினவுகிறார்.

தூங்குமூஞ்சி பாதகமென்று (கனம் பத்திராசிரியர்) அபிப்பிராயப் பட்டால் பர்த்தியாக வாழை அகத்தி உபயோகிக்கும்படி கூற நேர்ந்தது. விலக்கி தூங்குமூஞ்சிவைக்க விரும்புவதனாவசியம். தூங்குமூஞ்சியை விரும்பினாலும் மரத் தூரிலிருந்து 2-3 கஜத்தூரம் விட்டு 1 அடி ஆழம் 1 அடி அகலம், கால் வெட்டிவிடின் மரத்தின் பாதை விசேஷ செடிகளை பாதியாது. வெட்டிய காலுக்கு வெளியாக விசேஷ தினுசிருக்கலாம். ஸ்பெயின் ஆரஞ்சி தோட்டங்களில் மரத்தைச் சுற்றிக் கால்வெட்டுமுறை செய்யும்படி சாஸ்திரிகள் தீர்மானித்து அனுஷ்டிக்கப் படுது

## முக்கிய குறிப்புகள்

சந்தா நேயர்களிடம் வேண்டுகோள். பிழைபொருக்கமும் பிழைதிருத்தம் வேறொருபக்கமிருப்பதில் திருத்தத்தை பிழையுள்ள பக்கம் குறிக்கக்கஷ்டமும் தொந்தரவுமாய் திருத்தம் விட்டுப் போய் வர்த்தமானம் வியர்த்த மாகும். பிழையுள்ள பக்கம் திருத்தங்குறிக்கின் பத்திரிகையில் ஊமையூறிக்கெடும். விஷயம் அடங்கவும் மாட்டாது. நேயர்களே! திருத்தப்பக்க லெக்கத்தை பிழையுள்ள பக்கத்தில் குறித்து விடுவது சுலபமாகவும் சமாசாரம் விட்டுப்போகாமலுமிரு

க்கும். ஆகவின் திருத்த லெங்க மட்டும் குறித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

## கடிதவினாவுக்கு விடைகள்

## 11-ம் வாலம் 65-ம் பக்கத் தொடர்ச்சி

## பிழை திருத்தம்

61-ம் பக்க அடிக்குறிப்பு 1—2வது பிரிவில் தென்னோலையில் புள்ளிகாண்பது நோயாகவு மிருக்கலாமென்று சனம் பத்திராசிரியர் குறிப்பிட்டிருக்கிறார்.

நோய் புள்ளி கோழிமுட்டை உருவ நீளம் போன்று ஒன்றுஒன்றேகால் இஞ்சு நீளமும் அரை அங்குலஅகலமுமிருக்கும். பொட்டாஷ் குறைபுள்ளியோ இலை யோரம் சிருசா யாரம்பித்து இலைகளில் பரவும். இலைநரம்பு பசுமை குன்றா. இலை சுண்ணம் போல்வளேயும். கிருஷிகன் 6வது வாலம் 215ம் பக்கம் 4வதுபாரா பார்க்க.

61-ம் பக்க அடிக்குறிப்பு 2வது உட்பிரிவில் தென்னைக்கு உரமிடும்படி கூறுவது எந்த முறை தழுவி என சனம் பத்திராசிரியர் வினவுகிறார்.

ஜப்பான் ஜர்மனி முதலிய பல தேசரசாயன சாஸ்திரிகள் உரங்களைப் பரீட்சித்து வெளியிட்ட சாராம்சம் தொகுத்து 1903ம்வருடம் பாரி அண்டு கம்பேனியார் துண்டு பிரசுரம் வெளியிட்டிருக்கிறார்கள். இதை நின்று போன சைதாப்பேட்டை விவசாய தீபிகை 2 வது வாலத்தில் இந்தியா விவசாயிகளுக்கோர்மொழி என்று பிரசுரிக்கப் பட்டிருக்கிறது.

அதில் நிலத்தில் வருடா வருடம் பயிருவதில் நிலத்தின் சாரமான அநிந்திரிய வஸ்து குன்றிப் போகிறது. அநிந்திரிய வஸ்துவில் சுண்ணாம்பிருக்கிறது. அதை நிலத்திலமைக்கச் செய்வதவசியம். மாட்டெருவில் மூத்திரஞ் சேர்ந்து தயாரிக்காததால் போதிய சத்தில்லை. சாணியிலும் மூத்திரக் காரஞ் ஜாஸ்தி. இதன் குணந் தெரிந்தே சிலோன் ஐரோப்பியர் தென்னந் தோட்டத்தில் மரத்தைச் சுற்றி மாட்டைக் கட்டுவதில் மூத்திரம் மூலம் மரத்துக்கு உரச்சத்து சேர்ந்து தக்க பலன் தருகிறது. வட ஆற்காடு ஜில்லா பாலாறு நதிபாயும் நஞ்செய் நெல்பயிர் ஓங்கி வளர்ந்து தானிய மணிகுன்றி கருக்காய் மிகுத்திருந்தது. அங்கோர் விவசாயி தோல்ஷாப் கழிவு ரோமம் வாங்கி உரமிடவும் கருக்காயின்றி தானிய மணி திரண்டிருந்தது. ரோமங் கழிக்கும்போது சேர்த்த சுண்ணாம்பு தானிய

விளைவுக்கேதுவாயிருக்கக் கூடுமென்று ரசாயன சாஸ்திரி டாக்டர் ரோ என்ற கனவான் நிஷ்கரித்தாரும். மேற்கிந்தியதீவு தென்னை வேர் நோவுக்கு மற்ற உரங்களுடன் சுண்ணாம்பும் கலந்து வைக்கவே மரம் புஷ்டியாயுண்டாகி விட்டது.

இத்தியாதி நிலைமையில் தானியமணி விருத்திக்கோ தென்னைத்துரும்பை நீலைக்கவோ சுண்ணாம்பும் அவசியமென நிதர்சனமாகிறதன்றோ?

கோயமுத்தூர் பாகத்தில் கிணற்றுப்பக்கத்தென்னைகள் காய்ப்புமோசம், அதுகளுக்கு எலும்புரம் வைக்கவே வியக்கதக்கபலன் கண்டது. 1916-17 ம் வருடம் விவசாய பஞ்சாங்கம் 74-75 ம் பக்கம் பார்க்க.

ஒட்டுமாமரம் இலைமோதி மதர்த்ததுக்கு கார்த்திகை மாதம் உப்பு உரமாக்கவே இலையுதிர்ந்து நன்றாய் பலன் பிடித்ததாகத் தெரிகிறது இத்தியாதி ஏதுக்களைக் கருதி தென்னை காய்க்கச் செய்யுமுறை கூற நேர்ந்தது.

63ம் பக்கம் 1வது பாரா 5வது வரியில் (களை) என்பதை (களைக்கோ) எனவும்

63 வது பக்கம் 2வது பாரா முடிந்தவுடன் பிரஸ்தாப மகமதிய கண்டர் போன்று இந்தியாவிலுள்ள மகமதிய கனவான்கள் பூராவும் ஜீவகாருண்யம்பூததயைபச்சாத்தாபம் வகிப்பார்களாகில் பசுக்கொலை சம்பவியா, மகமதியரும் இந்தியரும் ஒத்து வாழலாம்- தேசஞ் சுபிட்ச மடையும் எனவும்,

63-வது பக்கம் 4 வது பாரா 2 வது வரியில்(பதிக காத்து)என்பதை (கண் காத்துபாவ பழம்) எனவும்.

63 வது பக்கம் 4வது பாருவில் 7 வது வரியில் (ர்ந்து இருந்தால் அவைகளை) என்பதை (ர்ந்தவைகளை) எனவும்.

63 வது பக்கம் 4வது பாரா 7வதுவரி முடிந்தவுடன் பின்வரும் வியாச மனுப்பியதை பிரசுரிக்கத் தவரிவிட்டது. அதை (அவ்வித கிளைகளில் ஆழ்காட்டி விரல் பருமனுக்கிரங்காதகிளை 2-3 கஜ நீளமுள்ளது குறிப்பிடவும். அந்த கிளையடியில் அரை அடிக்குமேல் காலே அரைக்கால் அடி நீளம் கிளை தொலி பூரா உரித்து நீக்கி வெளியாக்கவும்- அதில் சாணங் களிமண் கலந்து பூசவும்- பூசிய விடத்தில் உரித்த தேங்காய் கூந்தல் 2 சேர்த்தும் கூந்தல் ஈ.மயம் உரங்கலந்த மண் போட்டும் கூந்தல் விலகாமல் நாரால் கட்டி ஜலந்

விடவும்- கூந்தலுக்குக் கீழ் 2 இரண்டடை மாதத்தில் மரத்தில் வேர் தெரியும்- வேர் தெரிந்தவுடன் கூந்தலடிக்குகீழ் 3 இஞ்சுக்குக் கீழாக பேர்பாதி சம்பு வாளாலருத்து நிருத்தி ஜலம் விடவும். பின் 2 வாரம் பார்த்து பதிகக்கிளை வாடாதிருந்தால் பாக்கி கிளையைத் துண்டித்து கண்பதிக்கவேண்டிய விடத்தில் வைத்து விடலாம் கிளைவாட்டங் குடுத்தால் பின்னும் 1 மாதம்ஜலம் விட்டு துண்டிக்கலாம். பதிகக் கிளைவளையுமதலால் கவைகம்பு கொடுத்து நிறுத்தவேண்டும். பதிகம் துண்டிக்கும்போது பதிகக்கிளையை பக்கக் கிளையுடன் காற்றால் கட்டி விடவும் கட்டாதவரை பதிக்க் கூந்தல் அதிர்ச்சி கொடுத்து பதிகம் உலையும். ஜாக்கிரதையாய் துண்டிக்க வேண்டும்- பதிசம் உலைந்தால் தழுக்க கஷ்டப்படும், என்று சேர்த்துக் கொள்ள வேண்டும்,

64 ம் பக்கம் 2வது பாரு 3வது வரியில் (ச) என்பதை (அ) என்று திருத்துக-

64 ம் பக்கம் அடிக்குறிப்பில் ஏக்கருக்கு 1000 ரூபாய்க்கதிகமாக இலுமிச்சு மாகுலில்லை என கனம் பத்திராசிரியர் அபிப்பிராயப் படுகிறார்.

தஞ்சாவூர் ஸ்ரீமான் கி. குப்புசாமி பிள்ளையவர்கள் அய்யம் பேட்டை இலுமிச்சம் பயிர் நன்றுபாருய்ந்து நின்றுபோன தென்னிந்தியா விவசாயப் பத்திரிகை 1ம் வாலம் 278-ம் பக்கம் வரைந்திருக்கிறார். கனம் பத்திராசிரியர் சர்க்கியூட்டாய்போகும்போது விசாரணையிலறிந்து மகிழலாம். 3000 ரூபாய் மாசூல் சாதாரணமாம்- இந்த வரும்படி திட்டம் போட்டது 1000-ம் பழத்துக்கு $6\frac{1}{4}$ ரூபாய் விலையும் மரம் 1க்கு 2000ம் பழம் ஏற்பட்டது. 12 அடிக்கொரு செடி வைக்கப்படுது; தஞ்சை ஜில்லாமாதிரி மற்ற விடங்களில் நெருங்க வைத்தால் செடி யுண்டாக மாட்டாது. காய்ப்பும் மோசமாய் விடும். பிரயாசை ஜாஸ்தி எடுக்கப் படுதாம்.

திருநெல்வேலி ஜில்லாக் சடையத்தில் 20-22 அடிக் கொருமரம் வைக்கப்படுது. ஏக்கருக்கு 100-125 பரமாகும்- மரம் 1க்கு 25 ரூபாய் விதம் காய்ப்புண்டு. ஏகதேசம் அபூர்வமாய் 50 ரூபாய் தேருவதுமுண்டு- இங்கே சீதோஷ்ணம் மோசம். உஷ்ணம் ஜாஸ்தி- குளிர் காற்று போதா- நிலவளமும் சிரேஷ்டமன்று- பிரயாஸையால் ஜாஸ்தி வரும்படி கிட்டுகிறது. இந்த ஜில்லா நாடார் ஜாதியார் வசிக்கும் கிராமங்களில் அநேகம் இலுமிச்சு பயிருண்டு- தக்க மாசூல் தேறுது,

சிறு குடித்தனம் முன்னிலைக்கு வர இலுப்பிச்சு தக்க வருமானம் கிடைக்கும். கடையம் இலுப்பிச்சமரம் 1க்கு 2500 பழமும் காய்த்து 25 ருக்கு விற்கிறது. பிரியம் குறைபின் 100 க்கு10-12 அணுவாக விலை யாகும்- கொல்லம் திருநெல்வேலி போய்விலையாகிறது.

65ம் பக்கம் 2வது பாரா 4 வது வரியில் (1 மாதத்தில் புஷ்பித்து 3 மாதத்தில்) என்பதை ஒன்றே முக்கால் மாதத்தில் புஷ்பித்து இரண்டரை மாதத்தில்) எனவும் திருத்துக.

65 ம் பக்கம் 1 வது பாரா 16வது வரியில் (இருப்பு சட்டியில் போட்டுத் தீமூட்டி வறுக்கவே) என்பதை (இருப்பு சட்டியில் தீமூட்டி காய்ந்தவுடன் சட்டியையிறக்கி விரை போடவே பொரியும்) எனவுந் திருத்துக.

வெ. பு. திருமலையப்ப முதலியார்
வெள்ளசால்போஸ்ட்.

## CORRESPONDENCE

### கடிதம்

ஸ்ரீமான் கிருஷிகன் பத்திராதிபர் அவர்களுக்கு 2045 நெம்பர் சந்தாதார் வந்தனத்துடன் எழுதிக் கொண்டது.

தயவு செய்து கீழ்காணும் 4 கேழ்விகளுக்கு மட்டும் ஆவணிமாத சஞ்சிகையிலேயே விடையளிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். மற்றவை தங்களுக்கு சௌகரியப் பட்டபோது கேழ்வியையும் விடையையும் மட்டும் பிரசுரிக்கக் கோருகிறேன்:

1, முதல் தரமான வடிகால் வசதியுள்ளதும் செவ்வல் மணல் பாங்கானதும், 4அல்லது 5மாதம் வரிஜலம் பாயக்கூடியதுமான பூமிக்கு நாலரை அல்லது ஐந்து ஐந்தரை மாதவயதுள்ளதும் ஏக்கர்ஒன்றுக்கு 40—45 கலம் விளையக் கூடியதுமான நெல் தினுசு உண்டா?

2. நடுத்தரமான காலடி வசதியுள்ளதும் 5—6மாதம் ஜலம் பாயக்கூடியது தேவையானால் கிணற்றிரவையும் சேர்ந்ததுமான பூமிக்கு அதிக மழையில்லாதிருந்து கிணற்று ஜலமிறைத்தாலும் பயிர் தீய்ந்து கதிரே வாங்காமல் நின்று போகாத குணமுள்ளதும் ஐந்தரை 6 மாத வயதுள்ளதும் ஏ 1 க்கு 45-50 கலம் (கலம் பட்டணம்படி 36 விளையக் கூடியதுமான நெல்தினுசுண்டானால் ஏ 1 க்கு தேவையான அளவும் கிடைக்கும் விலாசமும் தெரியக் கோருகிறேன்- செப்டம்பர் மாத முதலில் தான் நாற்றுவிட முடியும்,

3, ஆட்டுக் கிடை மடக்கின உடன் உழாமல் 1 மாதம் பொருத்து சேடையாய் ஓட்டலாமா? ஒருக்கால் ஈரப்பதத்தில் புழுதியாய் ஓட்டி வைத்திருந்து பிறகு சேடையாய் ஓட்டினால் ஏதாவது கெடுதி யுண்டா? ஏக்கர்

1 க்கு 1000 ராத்தல், முத்துக்கொட்டை பிண்ணாக்கு உபயோகிப்பதற்கிடோ க எத்தனை ஆடுகளுள்ள கிடைவேண்டும்?

4. மணிலா பிரஸ்பிண்ணாக்கிற்கும் செக்குப் பிண்ணாக்கிற்கும் தழை தான்யம் முதலிய சத்துக்களி லேதாவது வித்தியாசமுண்டானூ லெவ்வ ளவு? மணிலா பிண்ணாக்கில் தான்ய சத்திருந்தால் அதை உடனே பயிர்க ளால் கிரஹிக்கக் கூடுமா? திண்டிவனம் தாலுக்கா மைலத்திய சிநோவ்ஷண பேதம் தங்களுக்குத் தெரியுமென்று நம்பிஇதைஎழுதத் துணிந்தேன்.

இராமகிருஷ்ண ரெட்டி
கொல்லியங்குளம்

பதில்

1 கோயம்பத்தூர் விவசாயப் பண்ணையிலும் இன்னும் மற்ற நல்ல விவசாயிகளும் நெல் பயிர் செய்து 5000இராத்தல் நிறையுள்ள நெல் மாசூல் ஒரு எக்கர் பூமியிலிருந்து எடுத்திருக்கிறார்கள். இது பயிரிடப் பட்ட தினுசு நெல்லை மாத்திரம் பொறுத்ததல்ல, செய் நேர்த்தி, தண்ணீர் பாசனும் எரு விடுதலைப் போன்ற சாதனங்களேயும் பொருத்திருக்கிறது. பொருக்கி எடுத்த விதை பொருக்கி எடுக்காத நெல் விதையிலுண்டாகிய பயிரின் மா சூலை விட 100 க்கு அனேகமாய் 16 முதல் 20 பங்கு ஜாஸ்தி மாசூல் கொடு க்கும்; ஆகையால் நிருபநேயர் கேட்கும் கேள்விக்கு ஜவாபு திட்டமாய் ஒருவராலும் எழுதமுடியாது.

2 நிருபநேயர் இருக்கும் இடத்திற்கு சமீபமாயுள்ள விவசாய உத்தி யோகஸ்தர்களுக்கு மனுச் செய்து கொண்டால் அவர்கள் மேல்படி நிலங் களை வந்து இலவசமாய்ச் சுற்றிப்பார்த்து எந்தத்தினுசு பயிர் செய்தால் இந்தமாதிரி இலாபம் கிடைக்குமென்று தெரிவிப்பார்கள்.

3 முதல் கேள்விக்கு கொடுத்திருக்கும்ஜவாபு பார்க்க. ஆட்டுக் கிடை போட்ட உடன் நிலத்தைஉழுது கொடுக்கவேண்டியது ரொம்பவும் அவசியம். அப்படி செய்யாவிடில் உரசத்தில் மெத்த பாகம் ஆவி ரூபமாய் ஓடிப்போய் விடும்.புழுதி ஓட்டி அப்பால் சேடையாக்கும் வழக்கும் அநேக இடங்களிலி ருக்கிறது. ஆனால் மெத்த கழிக்கால் நிலங்களில் இப்படிச் செய்தால் பயிர் வெக்கரித்துப்போவது வழக்கம்,இதற்குக்காரணம் முன் சஞ்சிகைகளில் பல தடவைகளில் எழுதப்பட்டிருக்கிறது. ஒரு எக்கர் நெல் பயிருக்கு 1000 இராத்தல் முத்துக்கொட்டை புண்ணாக்குப்போடும் வழக்கமில்லை. 500இரா த்தல் புண்ணாக்குப்போதும். 1000 இராத்தல் முத்துக்கொட்டை புண்ணா க்கிலுள்ள எந்த உரசத்து எத்தனை ஆட்டுக் கிடைக்கு சமானம் என்று குறித்துக் கேட்டிருந்தால் ஜவாபு எழுதக்கூடும்; முத்துக் கொட்டை பிண் ணாக்கிலுள்ள தாள்சத்து ,தான்யசத்து, இலை சத்து சுண்ணாம்பு சத்து ஆகிய வெவ்வேறு சத்துகளையும் கணக்கிட்டுப் பார்த்தாலொழிய மற்ற எருவு

டன் ஒப்பிடமுடியாது, ஆகையால் எந்த எரு சத்து என்று குறிப்பிட்டு எழுதினால் ஜவாபு எழுதக்கூடும்.

4 பிரஸ் புண்ணாக்குக்கும் செக்குப் புண்ணாக்குக்கும் சற்று வித்தியாசமிருக்கிறது, பிரஸ் புண்ணாக்கில் எண்ணை ஜாஸ்தி பிளியப்படுகிறதுடன் சூடுகாட்டி எண்ணை பிளியப் படுகிறது. இப்படி சூடுகாட்டும்போது சில எரு சத்துக்கள் சுலபமாய் கரைந்து உடனே உபகாரப்படக்கூடாமல் போய் விடுவதால் அதன் பலன் அவ்வருஷமே கிடைப்பதில்லை.

மணிலாக்கொட்டை புண்ணாக்கிலுள்ள தான்யசத்து பயிர்களுக்கு அவ்வருஷமே பிரயோஜனப்படக் கூடியதாயிருந்தாலும் அப்புண்ணாக்கை மாடுகளுக்கு அதாவது கால்நடைகளுக்கு தீவனமாய் உபயோகித்து அதிலிருந்து கிடைக்கும் சாணத்தை எருவாய் உபயோகித்தல் நலம், ஏனென்றால் அப்புண்ணாக்கிலிருக்கும் எண்ணைசத்து அந்த புண்ணாக்கிலுள்ள மற்ற எருச்சத்துகளைச் செடிகளுக்கு உடனே கிடைக்க ஒட்டாமல், எலுமிச்சங்காயை எண்ணையில் ஊர்சாய் போட்டு வைத்தால் எப்படி ஜல்தி கெட்டுப் போகாமல் பாதுகாத்து அவ்வெண்ணை வைத்துக் கொள்கிறதோ அதேபிரகாரம் பிண்ணாக்கிலுள்ள எண்ணை சத்து அவ்வெருசத்தைக் காப்பாற்றி உபயோகத்துக்கு உதவாத வண்ணம் வைத்துக் கொள்கிறது. அப்பேர்ப்பட்ட புண்ணாக்கை கால்நடைகளுக்கு ஆகாரமாக உபயோகித்தால் அப்புண்ணாக்கிலுள்ள எண்ணை மாட்டு போஷாப்புக்கு உபயோகப் படுவதுடன் அந்த சாணத்தில் மற்ற எரு சத்துக்கள் கழியப்பட்டு நல்ல உறமாகும்.

ப. ர.

## கிருஷிகன் பத்திராதிபர் அவர்களுக்கு

ஐயா, சைதாப்பேட்டை.

தங்கள் நாளது ஆடிமாதப் பத்திரிக்கையில் கண்டபடி கால் ஏகரு நிலத்தில் இலவமரம் வைக்க வேண்டுமென்று நினைக்கிறேன்-அதற்குப் போதுமான இலவம் பஞ்சுவிதை V. P. போஸ்ட்டில் அனுப்பக்கோருகிறேன்.

விரைமஞ்சள் தங்களிடத்தில் இருந்தால் 9 ஏகராவுக்குப் போதுமான விதை V. P. போஸ்ட்டில் அனுப்பக் கோருகிறேன்.

மணிலாக் கொட்டை விரையை மயில் துத்தத் தண்ணீரில்பிசிரி விதைத்தால் நல்லதா? அல்லது வேறே எந்தவிதமான மருந்தாவது கலந்து விதைக்கலாமா? அல்லது வெரும் மணிலா கொட்டையாக விதைப்பது நல்லதா? இது விபரத்தை தயவு செய்து தெரிவிக்கக் கோருகிறேன்.

மடகாஸ்கர்கடலைக்காய் விரை தங்களிடமிருந்தால் ஒருபடி வி. பி. போஸ்டில் அனுப்பக் கோருகிறேன்.

ரெயின்ட்ரீ விதை 20 வேண்டும். விலை தெரியப்படுத்தக் கோருகிறேன்.

எள்ளுக் கோலை மக்கவைத்து எருவாக நஞ்சைக்கு உபயோகப் படுத்தலாமா? தயவுசெய்து தெரியப் படுத்தக் கோருகிறேன்.

சிறு வெங்காயவிதை கால் ரூத்தல் செவ்வாழைவிதை கிளங்கு2ம் புழுதியில் விறைக்கக் கூடிய பாங்கு நெல்படி கால் இதுகளை போஸ்டிலாவது ரயில்வே பார்சலாகவாவது அனுப்பியாசை வி. பி. போஸ்டில் (தங்கள் 9ம் வால்யூம் 8 நீ பத்திரிக்கையுடன்) அனுப்பக் கோருகிறேன்.

பதிலுக்காக இதிலடக்கம் 1 அணு ஸ்டாம்பு வைத்தனுப்பி இருக்கிறேன்.

தங்களுக்கு கொடுத்த விரமத்துக்காக மன்னிக்சக்கோருகிறேன்.

சாமந்திப்பூ மரிகொழுந்து விதை இருந்தால் வகைக்கு 1 அவுன்ஸ் வி பி. போஸ்ட்டில் அனுப்பக் கோருகிறேன். தங்கள் அன்புள்ள

சு. க. வெங்கிட சுப்பைய ரெட்டி
1892 ம் நெம்பர் சந்தாதார்

பதில்

இலவம் பஞ்சு விதை தற்காலம் எங்களிடமில்லை. மறுவருடம்தைமாதத்தில் எழுதினால் கொடுக்கக் கூடும். தற்காலம் வேண்டுமானால் சென்னைக்கடுத்த சேனும்பேட்டை அக்ரிஆர்டிகல்சரல் சுசைடிக்கு எழுதி அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

விதை மஞ்சள் நடும்காலம் அனேகமாய் முடிவுக்கு வந்துவிட்டது: கோயம்புத்தூர் ஜில்லா ஈரோடு முதலிய இடங்களில் ஒருவேளை கிடைக்கக்கூடும். அந்த ஜில்லா விவசாய டெப்டி டைரெக்டர் அவர்களுக்கு மனுச் செய்தால் தெரியும்.

மணிலாக்கொட்டை விதையை மயில் துத்தத் தண்ணீரில் ஊரப்போட்டு விதைக்குர் வழக்கம் சாதாரணமாய் கிடையாது: சோள விதையைத்தான் இப்படி செய்யும் வழக்கமுண்டு, சாதாரணமாய் மாட்டு மூத்திரம் அல்லது ஆட்டு மூத்திரத்தில் ஊரினவிதை விதைக்கும் வழக்கம் சிலகிருஷிகர் கையாடுகிறார்கள்.

மடகாஸகர் கடலைக்காய் விதை வேண்டுமானால் பாங்கிமலை விவசாய டெப்டிடைரெக்டர் அவர்களுக்கு மனு செய்தால் ஒரு வேளை கிடைக்கக் கூடும்.

ரெயின்டிரீவிதை வேண்டுமானால் இனி இரண்டு மாதம் பொருத்து ஞாபகப் படுத்தினால் நாம் சேகரித்து அனுப்பக்கூடும். உடனே தேவையானால் சென்னை அக்ரிஆர்டிகல்சரல் தோட்டம் சூப்பிரன்டன்டன்ட் அவர்களிடம் கிடைக்கும்.

எள்ளுக் கோலை சாணியுடன் மக்கவைத்து நெல்பயிருக்கு எருவாய் உபயோகிப்பதுண்டு, நல்லபலனும் கொடுத்திருக்கிறது.

சிரு வெங்காயவிதை வேண்டியவர்கள் கூடலூருக்கடுத்த தேவனாம் பட்டணத்துக்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம். நெல்விக்குப்பத்துக் கடுத்த பாலூர் விவசாயப் பண்ணை மானேஜருக்கு முன்பணம்அனுப்பினால் அவர் வாங்கியனுப்ப ஏற்பாடு செய்வார். செவ்வாளைக்கிழங்குகள் செங்கல்பட்டுக் கடுத்த சதரங்கபட்டணம் வாயலூரில் கிடைக்கும். பங்குநெல் கோயம் புத்தூர் ஜில்லா விவசாய டிப்டிடைரெக்டரிடம் கிடைக்கும். இப்போதுநாம் 10 படி விதை வரவழைத்து வைத்திருக்கிறோம். வேண்டியவர்களுக்குக் கொஞ்சம் கொடுக்கக்கூடும்.

சாமந்தி பதியங்கள் மூலியமாயும் பெருந்தரப்பூவிதை மூலியமாயும் உண்டாக்கப்படுகிறது, இவ்விதை வேண்டுமானால் சேனும்பேட்டை அக்ரிஆர்டிகல்சரல் சுசைடியில் கிடைக்கும் பு. ர்.

# "கிருஷிகன்" பஞ்சாங்கம்

விபவஸு புரட்டாசி—சாலிவாகன 1850 கலியுகாதி 5029,பசலி 1338

கொல்லம் 1104,ஹிஜரி 1347இங்கிலீஷ் ,1928 செப்டம்பர்-அக்டோபர்மீ

| ரபீயுலவ்வல் | செப்டம்பர் | புரட்டாசி | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | 1 | ஞா | துதி 5-16 | உஸ்2-38 | அ3சி | பலராம ஜயந்தி |
| 2 | 17 | 2 | தி | திரு 8-31 | சித் 7-20 | சி8அ | விநாயக சதுர்த்தி |
| 3 | 18 | 3 | செ | சது 12-46 | சுவா13-4 | சி13அ | புதுராட்னம்உபயோகிக்க |
| 4 | 19 | 4 | புத | பஞ் 17-36 | விசா19 12 | சி60 | தானியமளக்க |
| 5 | 20 | 5 | வி | சஷ் 22-39 | அநு25-57 | சி60 | மழைபெய்யலாம் |
| 6 | 21 | 6 | வெ | சப் 27-31 | கே 31-51 | ம32அ | சூளையில் நெருப்பிட |
| 7 | 22 | 7 | ச | அஷ் 31-55 | மூல37-36 | சி60 | யாத்திரையில்திதிசெய்ய |
| 8 | 23 | 8 | ஞா | நவ 35-28 | பூரா42-31 | சி43அ | மழைபெய்யலாம் |
| 9 | 24 | 9 | தி | தச 37-56 | உத் 46-21 | ம46அ | கஜலட்சுமி விரதம் |
| 10 | 25 | 10 | செ | ஏகா 39-12 | திரு49-0 | சி60 | தனியநாள் |
| 11 | 26 | 11 | புத | துவா 38-5 | அவி49-55 | ம50சி | வாமனஜயந்தி |
| 12 | 27 | 12 | வி | திர 37-52 | சத 50-32 | ம51சி | சுபகாரியம் விலக்க |
| 13 | 28 | 13 | வெ | சது 35-25 | பூர 49-35 | சி60 | விவகாரம் முடிக்க |
| 14 | 29 | 14 | ச | ○பெ31-57 | உத் 47-38 | சி48ம | தேவதா உபாசனம் |
| 15 | 30 | 15 | ஞா | பிர 27-37 | ரே 44-53 | அ45சி | கர்ப்பாதானம் |
| 16 | 1 | 16 | தி | துதி 22-35 | அசு 41-30 | சி60 | கரிநாள் |
| 17 | 2 | 17 | செ | திரு 17_3 | பர 37-40 | சி60 | மழை பெய்யலாம் |
| 18 | 3 | 18 | புத | சது 11-14 | *கா33 37 | அ34சி | ஹோமாரம்பம் |
| 19 | 4 | 19 | வி | பஞ் 5-14 | ரோ29-31 | ம60 | சுபகாரியம் பில்க்க |
| | | | | சஷ் 54-46 | | | |
| 20 | 5 | 20 | வெ | சப் 53-39 | மிரு25-35 | சி60 | தனியநாள் |
| 21 | 6 | 21 | ச | அஷ்49-28 | திரு21-57 | சி60 | சிவபூஜை செய்ய |
| 22 | 7 | 22 | ஞா | நவ 43-56 | புன 18-55 | சி60 | இரவு வடக்கு பிரயாண |
| 23 | 8 | 23 | தி | தச40-12 | பூச16-34 | சி60 | யாத்திரை செய்ய |
| 24 | 9 | 24 | செ | ஏகா 37-28 | ஆயி15-10 | சி15 அ | தனிய நாள் |
| 25 | 10 | 25 | புத | துவா 35-49 | மக 14-46 | சி15ம | சசம் வடுக்க |
| 26 | 11 | 26 | வி | திர 35-28 | பூர15-36 | சி16ம | மாசசிவராத்திரி |
| 27 | 12 | 27 | வெ | சது 36-23 | உத்ர17:39 | சி18அ | காலை தோட்டம்வைக்க |
| 28 | 13 | 28 | ச | ● அ38-32 | ஹஸ்20 54 | ம60 | மாளய அமாவாசை |
| 29 | 14 | 29 | ஞா | பிர 41-50 | சித்25 21 | சி60 | கரி நாள் |
| 30 | 15 | 30 | தி | துதி47 4 | சுவா30 43 | அ31ம | கும்பம் விவாஹசீமந்தம் |
| 31 | 16 | 31 | செ | திரு50 59 | விசா36 47 | ம37சி | |

## இராஜாம்பாள், மோஹன சுந்தரம், ஆநந்த கிருஷ்ணன், சந்திர காந்தா, இராஜேந்திரன், விஜயராகவன், வரதராஜம், (1, 2, பாகம்)

மேற்சொன்ன எட்டு புஸ்தகங்களும் ஒன்றைவிட ஒன்று மேலே சொல்லியிருக்கும் விஷயங்களைத்தாங்கி "நான் முன், நான் முன்" என ஆர்ப்பரித்து ஆநந்தத்தை விளைவிக்கின்றன.

மேற்சொன்ன ஒவ்வொரு புஸ்தகத்திலும் ஸ்திரீ, புருஷ பாலக பாலகிகளுக்கு யுக்தமான அநேக அதியற்புத விஷயங்களும், துப்பறிய வேண்டி (அபார சக்தியுடன்) செய்யும் தந்திரங்களும், நீதி விஷயங்களும், (சன்மார்க்கிகள் அநுபவிக்கும் இன்பமும், துன்மார்க்கிகள் துன்பத்தைப் பங்கிட்டுக் கொள்வார்கள் என்பதையும்) தற்காலத்திற்கேற்றவாறு அநேக நவரசகரீகமான விஷயங்களும், பெரியோரன்றிச் சிறியோரும், பெண்பாலரும எளிதில் உணருமாறு, உயர்ந்ததும், அழகியதுமாய், (நல்லகாகிதத்தில் நன்றாய் அச்சிடப்பட்டிருக்கின்றன. இப்புஸ்தகங்களில் காணும் ஒவ்வோர் விஷயங்களும் அறிவைப் பரவச்செய்யும் சக்திவாய்ந்தன.

இப்புஸ்தகங்களைப் போலொத்த வேறு புஸ்தகங்கள் இதுவரையில் தமிழ் பாஷையில் பிரசுரிக்கப்படவில்லை யென்பது இதை வாசித்த எல்லோருடைய அபிப்பிராயம். இவைகளைப் புகழ்ந்து எழுதியிருக்கும் நற்சாக்ஷிப்பத்திரங்கள் எம்மிடம் ஆயிரக்கணக்காயிருக்கின்றன, இவ்வளவு அருமையான புஸ்தகங்களை எல்லாரும் வாசித்து ஆநந்த மடையவேண்டு மென்னும் எண்ணத்துடன் முதல் நான்கு நாவல்கள் ஒவ்வொன்றும் விலை அணா 12-ம் மற்றவை ஒவ்வொன்றும் ரூ. 1 என்று குறைத்து வைக்கப்பட்டிருக்கிறது, தபாற்கூலி, வி. பி. கமிஷன் பிரத்தியேகம்.

ஒரு புஸ்தகம் வி. பி. யில் பெறுபவர்களுக்கு தபால் செலவு 6 அணாவும், 2 புஸ்தகங்கள் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு 8 அணாவும் 3 புஸ்தகங்களுக்கு 10 அணாவும், 4 புஸ்தகங்களுக்கு 11 அணாவும் புஸ்தகங்களின் விலைக்குமேல் அதிகம் ஆகும் என்பதைக் கவனிக்கக் கோருகின்றோம்.

வேண்டியவர்கள்:—

ரங்கராஜு அண்டு பிரதர்ஸ்.
"ஜெகந்நாதபாக்" சைதாப்பேட்டை போஸ்ட் சென்னை,
என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக் கொள்ளலாம்.

# இரு கிருஷிகர்களின் சம்பாஷணை

ரங்கசாமி பிள்ளை:—ரெட்டியார் அவாள்! நேற்றையதினம் சாயந்திரம் தங்களைக் காண்பதற்காகத் தங்கள் வீட்டிற்கு வந்திருந்தேன். தாங்கள் வெளியில் போயிருப்பதாகச் சொன்னார்கள்.

பாஷ்யம் ரெட்டியார்:—ஆம் வாஸ்தவமே! நேற்று நடந்த கண்காட்சியில் பர்டிலைஸர் ப்ராப்பகாண்டாவால் நடத்தப்பட்ட ஒளி விசித்திரப் பட காட்சியைப் பார்க்கச் சென்றிருந்தேன்.

ர. பிள்ளை:—அந்தக் காட்சியில் நடந்த விஷயத்தின் சாராம்சம் என்ன?

பா. ரெட்டியார்:—சொல்லுகிறேன். கேளுங்கள். உபன்யாஸம் செய்தவர் சொன்னதாவது, சாணி யெருவைவிட சிறந்த எருவே உலகத்தில் இல்லை யென்றும், நல்ல சாணியெரு கிடைக்காததால் ஸல்பேட் ஆப் அம்மோனியா, ஸுபர்பாஸ் பேட் முதலிய செயற்கை உரங்களை உபயோகிக்க வேண்டுமென்றும் இவ்விதம் இச் செயற்கை உரங்களை உபயோகித்தால் நிலத்தின்கண்டு முதலை அதிகரிக்கச் செய்யலாம் என்றும் சொன்னர். இத்துடன் பர்டிலைஸர் ப்ரரப்பகாண்டா ஆப் இந்தியா லிமிடெட் என்னும் கம்பெனியாரின் பிரதிநிதிகளும் பிரசாரகர்களும் நம்முடைய நிலங்களைப் பரிசோதித்து அவைகளினுடைய இயல்புக்குத்தக்கவாறு உரங்களைச்சிபார்சு செய்கிறார்கள். இவர்கள் விவசாய இலாகாவின் கொள்கைக்கு ஏற்றவாறு உரங்களை சிபார்சு செய்கிறதனுல், அநேகமாய் எல்லா மிராசுதாரர்களும் இவர்களுடைய உரங்களை வாங்குகிறார்கள் என்றும் எடுத்துக் காட்டினர். சல்பேட் ஆப் அம்மோனியா ஸுபர்பாஸ்பேட் முதலிய உரங்களை இந்திரிய வஸ்துக்களுடன் கலந்து உபயோகிப்பதால் கிடைக்கும் ஜாஸ்திமகசூலை படங்கள் மூலமாய்க் காண்பித்தார்கள்: ஐக்கிய விவசாயச் சங்கங்களின் நிருபணைப் பண்ணைகளில், எல்லா அபிவிருத்திகளுடன் இவ்வுரசங்களையும் உபயோகிப்பதால் கிடைத்த அதிகமகசூலைப்படங்கள் மூலமாய் செவ்வனே விளக்கிக் காண்பிக்கப்பட்டது.

ர. பிள்ளை:—இவ்வுரங்களை உபயோகிப்பதால் நிலத்தின் தன்மை கெட்டு விடுகிறதென்றும் இவ்வுரங்களை உபயோகித்தால், ஜீவாதாரத்திற்கு எதுவான பிராணபிவர்த்தனி (வைட்டாமின்) என்னும் சத்துஇல்லாததனுல், இவ்வுரங்களின் பயனுக்கிடைத்த தானியங்களை உண்பது சக்கைக்குச் சமானமென்றும் சிலருடைய அபிப்பிராயம்:

பா. ரெட்டியார்:—விவசாய இலாகாவின் அதிகாரியான் டைரெக்டர் துரையவர்களே, அவர்கள் செய்யும் பிரசங்கங்கள் தோறும் ஸல்பேட் ஆப் அம்மோனியாவையும் ஸுபர்பாஸ் பேட்டையும் நாம வழக்கமாய் உபயோகிக்கும் தொழு எருவில் பாதியுடனுவது அல்லது மூன்றில் ஒரு பங்குடனுவது உபயோகிக்கும்படிச் சொல்லுகிறார்கள் அல்லவா? இவ்விதம் இயற்கை உரங்களையும் செயற்கை உரங்களையும் கலந்து உபயோகித்து தற்கால விலைரீதி, கால வேறுபாடுகள் முதலியவற்றிற்குத் தக்கவாறு பயிரிடுவது ஒவ்வொரு மிராசுதாரரின் கடமையென்றும் வற்புறுத்தினர்கள், இனி நாம் அவருடைய புத்திமதிகளுக் கேற்றவாறு, நவீன விவசாய முறைகளையே கையாட வேண்டும். இன்றுமுதல்செயற்கை உரங்களை நாம் அதிகமாக வாங்கவேண்டும்.

ர. பிள்ளை,—நீங்கள் சொல்வதிருக்கட்டும் புஸ்தகத்தைப் படித்துவிட்டு உபன்யாசம் செய்யும் இவர்கள் பேச்சை நம்பிச் செய்வது "ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவும்" என்று நினைப்பது போலல்லவா இருக்கிறது. இவர்கள் சொற்படி நாம் பயிரிடுவோமானால், நமக்கு ஏதாவது மிஞ்சுமா?

பா. ரெட்டி:—நன்றாய்க் கேட்டீர், நான் இதற்கு முன் எனக்குக் கிடைத்த சாணி எருவை என் நிலங்களில் பாதிக்கு உபயோகித்து, பாதிக்கு எருப் போடாமலே பயிரிடுவது வழக்கம். பார்டிலெவர்ப்ராப்பகாண்டாவின்பிரசாரகர்கள் சொற்படிக்கு நான் 3 வருஷக்காலமாய் எனக்குக் கிடைக்கும் சாணியெருவை என் நிலங்கள் பூராவிற்கும் உபயோகித்து, இவைகள் எல்லாவற்றிற்கும் ஸல்பேட் ஆப் அம்மோனியாவையும் ஸூபர்பாஸ்பேட்டையும் உபயோகித்து வருகிறேன். இத்தனை வருஷமாய் எனக்குக் கிடைத்துக் கொண்டிருந்த லாபத்தை விட இப்பொழுது இரண்டு பங்கு கிடைக்கிறது. அப்படியிருக்கையில் நாம் ஏன் இவ்வுரங்களை உபயோகிக்கக்கூடாது? இது மாத்திரமல்ல, நான் சாணியெருவிலும் கொஞ்சம் உபயோகிப்பதனால் நிலத்தின் தன்மையும் விருத்தியாகிறது. ஆகவேஇப்பொழுதாவது நீர் திருப்தி யடைந்தீரா?

ர. பிள்ளை—அதிருக்கட்டும், நம்மைப்போன்ற சுதேசிகள் அயல் நாட்டிலிருந்துவரும் வஸ்துக்களாகிய ஸல்பேட் ஆப் அம்மோனிய முதலியவைகளை வாங்குவது தர்மமாகுமா?

பா ரெட்டியார்—நன்றாய்ச் சொன்னீர், நீர் சொன்னவை யாவும் தெரியாத்தனத்தால் என்று நினைத்து நான் வருத்தப்படுகிறேன். நம் தாய் நாட்டிலேயே வங்காளம், முதலிய அநேக மாகாணங்களில் ஸல்பேட் ஆப் அம்மோனியாவை ஏராளமாக உற்பத்தி செய்கின்றார்கள். இப்படியிருக்கையில் இவைகள் அயல் நாட்டுச் சாமான்கள் என்று சொல்வது எப்படிப் பொருந்தும்?

ர. பிள்ளை—இப்பொழுதுதான் எல்லா விஷயங்களும் நான் தெரிந்துகொண்டேன். ஸல்பேட் ஆப் அம்மோனியா, ஸூபர்பாஸ்பேட் முதலிய உரங்களைப்பற்றிய விலைவிபரமும், இவைகள் கிடைக்கும் இடங்களும் இவைகளை உபயோகிக்க வேண்டிய முறை அளவு காலம், முதலியவைகளும் யாரைக் கேட்டால் தெரியவரும்?

பா. ரெட்டியார்—சென்னை அரமனைக்காரத் தெருவிலுள்ள ப்ரன்ன் மாண்ட் கம்பெனியார்களுக்காவது அல்லது பற்பல இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஆயிரக் கணக்கான டெப்போக்களுக்காவது, உமக்கு ஸமீபத்திலுள்ள மேற்படி கம்பெனியார்களின் பிரசாரகர்களுக்காவது எழுதினால் அவர்களால் இயன்ற உதவியைச் செய்யத் தயாராயிருக்கிறார்கள். தவிர ஸல்பேட் ஆப் அம்மோனியாவையும் ஸூபர்பாஸ்பேட்டையும் உபயோகித்த மிராசுதார்களின் அபிப்பிராயம் என்னும் இப்புஸ்தகத்தை ஒரு முறை படிப்பீரானால் உம்முடைய சந்தேகம் எல்லாம் பறந்துவிடும்.

ர. பிள்ளை—உம்மால் இன்று அநேகவிஷயம் தெரிந்துகொண்டேன். இனி நான் இவ்விதமே செய்கிறேன். எனக்கு நேரமாய் விட்டபடியால் நான் போய் வருகிறேன் வந்தனம்.

பார்டிலெவர் ப்ராபகாண்டா,
ஆப் இந்தியா லிமிடெட்,
தபாற்பெட்டி 130 மதராஸ்,

(விளம்பரம்)

## The Journal of the
## Madras Agicultural Students' Union.

A monthly Journal in English devoted to the Study of Improved Agriculture. Articles of Scientific and general interest are published along with Extracts & reviews from various Journals both Indian & foreign Subscription per annum Rs. Four. Single copy as Six.

Apply to Manager M. A. S. U. Journal.

AGRICULTURAL COLLEGE, LAWLEY ROAD P. O. *Coimbatore*

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய

இந்த நாவல் "இது சிறந்த நாவல்" படிப்பதில் ஆர்வ முடையோர் புகழத்தக்கபடி நாவலுக்குரிய இலக்ஷணங்களுடன் அமைந்திருக்கிறது. இதனைப் படிக்கத்தொடங்கினால் முடிக்காமல் புத்தத்தைக் கீழேவைக்க மனம் வாராது.

இது பாலவிநோதினிப் பத்திராசிரியராகிய வரகவி. திரு சுப்பிரமண்ய பாரதியார் எழுதிய முகவுரையுடன் கூடியது. இதுவரையில் எழுதி வெளிவந்த நாவல்களைவிட இதில், சிறுவரும், சிறுமியரும் உவந்து படிக்கவும், போற்றவும், படித்ததை நினைக்கவும், பிறருக்குச்சொல்லிப் புகழவும் தக்கபடி உயர்ந்த நீதிகளையும், உலகப்போக்கையும், கற்பின் பிரபாவத்தையும், பெரியாரின் பெருமையையும் நல்லோரின் நடவடிக்கைகளையும், உத்தமகுணப்பெண்களின் இலக்ஷணங்களையும் அநேகமேற்கோள்களுடன் விளங்க வைத்திருக்கிறபடியால், இந்த நாவல், கேவலம் நாவல வகையில் எண்ணிப் புறக்கணிக்கத்தக்கதல்ல; போற்றத்தக்கதேயாம்.

ஜெகன் மோகினி ஆபீஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

## விவசாயப் புத்தகங்கள்

| | ரூ அ பை. |
|---|---|
| விவசாய விளக்கம் | 1—4—0 |
| நெல் | 1—0—0 |
| கரும்பு | 1—0—0 |
| மா | 0—7—0 |

தபால் சார்ஜ் வி. பி. முதலியன பிரத்தியேகம்

ஜி. இராஜகோபால் நாயுடு
பென்ஷனட் விவசாய இன்ஸ்பெக்டர்
பெரியபாளையம், பொன்னேரி மார்க்கம்.

Printed and Published by J. R. Ranga Raju at the "Raju Presss" "Jagannatha Baugh" Saidapet MADRAS